கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை நவம்பர் 2010 ₹ 15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



ஸ்ரீ கிருஷ்ணருடனான நமது நித்திய உறவு புதுப்பிக்கப்படும்போது ஆன்மீகப் பண்பாட்டின் தெய்வீகத் தளத்தினை நம்மால் அடைய முடியும். அந்த தெய்வீகத் தளத்தினை வழங்குவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின்* குறிக்கோள். எல்லாரையும் கவரும் பரம புருஷரான கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பதையும் அவரின் அம்சங்களாகிய நாம் அனைவரும் அவரது தொண்டர்கள் என்பதையும் உணர்ந்து, பாடல், ஆடல், விருந்து, கலை, இலக்கியம், விஞ்ஞானம், தத்துவம் ஆகியவற்றைக் கொண்டு, மனித சமுதாயத்தை மீண்டும் ஆன்மீகப்படுத்துவதற்கான வழிமுறையினை கிருஷ்ண பக்தி இயக்கம் வழங்கி வருகிறது. இவ்வழிமுறை எளிமையானதும் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதும் அங்கீகரிக்கப்பட்டதுமாகும். அறிவியல், கல்வி, தொழில்நுட்பம், பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றம் கண்டுள்ள தற்போதைய சமுதாயம் ஆன்மீகத் துறையிலும் அத்தகு முன்னேற்றத்தை அடையவில்லையெனில், அனைத்தும் வீணாகிவிடும். நாட்டின் தலைவர்கள் அனைவரும் கிருஷ்ண உணர்வைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு, கிருஷ்ண விஞ்ஞானத்தை அறிவதில் ஆர்வம் காட்ட வேண்டும்; அதன் மூலம் பொதுமக்களை ஆன்மீகத்திலும் வழிகாட்ட அவர்களால் முடியும். மனித சமுதாயம் உண்மையான முன்னேற்றத்தை அடைய வேண்டுமெனில், மக்கள் தங்களது பௌதிக வசதிகளைப் பெருக்கிக் கொண்டால் மட்டும் போதாது; ஆன்மீக அமைதி, ஆனந்தம், மற்றும் அறிவையும் அடைதல் அவசியம். கலி யுகத்தில் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகப் பரிந்துரைக்கப்படும் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை ஜபம் செய்வதாலும், *ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தில்* வழங்கப்படும் வேதப் பண்பாட்டின் தத்துவங்களைப் புரிந்துகொள்வதாலும், மனித சமுதாயம் தெய்வீகமான நிலைக்கு உயர்வு பெற்று, ஆன்மீக அமைதி, ஆனந்தம், மற்றும் அறிவைப் பெற இயலும்.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**மலர் 2, இதழ் 8** **நவம்பர் 2010**


3 உங்களின் வரிகள்

4 கிருஷ்ண நாமத்தின் சக்தி

10 சுள்ளிகளை சுமக்கும் பாட்டி

12 நரகாசுர வதம்

18 பிரபுபாதர் நூற்றந்தாதி

20 மனித வாழ்வின் நான்கு எதிரிகள்

25 புகைப்படச் செய்திகள்

27 அறிவு தோன்றிய நாள் எது?

30 ஸ்ரீமத் பாகவதம்

31 கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்


## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.


**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அலுவலக உதவி:** சுபாத்ம கௌரங்க தாஸ், சதீஷ் குமார்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600 073.
தொலைபேசி: (044) 22272920

**சந்தா அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.


**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக
அறக்கட்டளை

## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

## உங்களின் வரிகள்



### மதுரம், மதுரம், அனைத்தும் மதுரம்

மதுராஷ்டகத்தின் மதுரத்தை அறிய வைத்த செப்டம்பர் இதழில் ஒவ்வொரு கட்டுரையும் மதுரம்

பிறப்பற்றவரது பிறப்பின் காரணத்தை விளக்கியது (பிரபுபாதரின் உரை) மதுரம்

கோபியர்களின் சுயநலமற்ற தூய பக்தியை வரைபடம் மூலம் விளக்கியது (கிருஷ்ணருக்குத் தலைவலி) மதுரம்

பிரபுபாதரின் வாழ்க்கை மதுரம்; அதை அந்தாதி வடிவில் அளித்தது (பிரபுபாதர் நூற்றந்தாதி) மதுரம்

நித்தியமான நிஜ உண்மையைத் தேட வைத்தது (இன்பத்தைத் தேடி) மதுரம்

விருந்தாவனம் மற்றும் விருந்தாவன ராணியின் மதுரத்தை அறிய வைத்தது (ஸ்ரீமதி ராதாராணியின் மகத்துவம்) மதுரம்

மதுரங்களின் மன்னரின் மகிமையை விளக்கும் ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் ஒவ்வொரு பதமும் மதுரம்

கேசவ பலராம தாஸ், சென்னை

### அனைவருக்கும் வாழ்த்துக்கள்

அக்டோபர் மாத *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்* மிகவும் நன்றாக வெளிவந்துள்ளது. எல்லா கட்டுரைகளும் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் இதன் தரம், வடிவமைப்பு போன்றவற்றில் முன்னேற்றம் இருப்பதைக் காண்பதில் மகிழ்ச்சி. என்னுடைய வாழ்த்துக் களையும் நன்றிகளையும் ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் குழுவினர் அனைவருக்கும் தெரிவிப்பீராக.

சுமித்ர கிருஷ்ண தாஸ், தலைவர்,
இஸ்கான், சென்னை

### எனது பெரும் பாக்கியம்

வணக்கம். நான் இந்த மாதம் ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகையின் சந்தாதாரராக சேர்ந்துள்ளேன். இஃது எனது பாக்கியம். நான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தீவிர பக்தன். இந்த பதிப்பில் ஸ்தாபக ஆச்சாரியாரின் "கடவுள் அவதரிப்பது ஏன்?" என்னும் கட்டுரை அற்புதமாக இருந்தது. பிறப்பற்றவரின் பிறப்பு, கிருஷ்ணர் பிறந்த சூழ்நிலை, நடுப்பக்கத்தில் அற்புதமான படம், ஸ்ரீமதி ராதாராணியின் மகத்துவம், பிரபுபாதர் நூற்றந்தாதி, இன்பத்தைத் தேடி, பாகவதம், கிருஷ்ணரைக் காணுதல் முதலிய அனைத்தும் நன்றாக இருந்தன. மிக்க நன்றி. இதை நான் தெரிந்து கொண்டது நான் செய்த பெரும் பாக்கியம். நன்றி, நன்றி, நன்றி.

வினோத் சுபாஷ், K.V.குப்பம்

### பாராட்டுகள்

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மிகவும் நன்றாக இருக்கின்றது. நான் எதிர்பார்த்த பல்வேறு கேள்விகளுக்கு பதில் கிடைக்கிறது. நேரமில்லை, நேரமில்லை—அற்புதமாக இருந்தது. நைவேத்யம் செய்வதற்கான வழிமுறையை விளக்கியிருந்தது உபயோகமாக இருந்தது. பிரபுபாதரின் கேள்வி பதில் பகுதி ஒவ்வொரு மாதத்திலும் அவசியத் தேவையாகும். மொத்தத்தில் ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்திற்கு எங்களின் முழுப் பாராட்டுகள்.

ஜெயரதி தட்சணாமூர்த்தி,
சுவிட்சர்லாந்து

### அற்புதமான படம்

ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் செப்டம்பர் மாத இதழின் கடைசி பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படம் (அன்னை யசோதை கிருஷ்ணருக்கு உணவூட்டுதல்) மிகவும் அருமை. கோடிக்கணக்கான பிரபஞ்சங்களின் மன்னர் தனது அன்னையின் மடியில் அமைதியாக அமர்ந்திருப்பதும், அவள் ஏதுமறியாமல் அன்புடன் அவருக்கு உணவூட்டுவதும் அற்புதம். என்னே ஆனந்த லீலை!

பிரியதர்ஷினி, சேலம்

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...


தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன.

# கிருஷ்ண நாமத்தின் சக்தி

**1968ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் தேதியன்று கனடாவிலுள்ள மான்ட்ரியல் நகரில் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி பிரபுபாதர் அருளிய உரை.**

## உண்மையான உணர்வு

பெரியோர்களே, தாய்மார்களே! நம்முடைய உண்மையான உணர்வு நிலையை விழிப்படையச் செய்வதற்காகவே இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஜடத்துடனான நமது நீண்ட உறவின் காரணமாக, நமது உணர்வு நிலை தற்போது களங்கமடைந்துள்ளது. மேகத்திலிருந்து விழும் மழை நீர் முதலில் தூய்மையாக இருக்கிறது; ஆனால் பூமியின் மேல் விழுந்தவுடன் பல அசுத்தமான பொருள்களுடன் அது கலந்துவிடுகிறது. அதுபோலவே ஆரம்பத்தில் ஆன்மீக ஆத்மாவாகிய நமது உணர்வு களங்கப்படாமல் இருந்தது; ஆனால் நம்முடைய ஜடத் தொடர்பின் காரணமாக அது களங்கப்பட்டுள்ளது. அந்த களங்கமடைந்த உணர்வின் காரணத்தினால்தான் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையில் கருத்து வேற்றுமைகள் ஏற்படுகின்றன. நான் ஒருவிதமாக நினைக்கிறேன்; நீங்கள் வேறு மாதிரி நினைக்கிறீர்கள். நாம் இருவரும் ஒத்துப்போவதில்லை. ஆனால் ஆரம்பத்தில் என்னுடைய உணர்வும் உங்களுடைய உணர்வும் ஒரே மாதிரியாக இருந்தன. அந்த ஒரே உணர்வுநிலை யாது? "கடவுள் மிகப் பெரியவர்; நான் அவருடைய நிரந்தர சேவகன்" என்று நினைப்பதே அந்த தூய்மையான உணர்வு நிலையாகும். மாறாக, செயற்கையான முறையில் நாம் கடவுளைப் போன்று செயல்படத் துவங்கியவுடன் நம்முடைய களங்கங்கள் தொடங்குகின்றன.



கடவுளுக்கும் தனக்குமுள்ள நித்திய உறவை மறந்து, ஜட இயற்கையின் மீது ஜீவாத்மா ஆதிக்கத்தைச் செலுத்த முயற்சிக்கும்போது, ஜீவாத்மாவின் அந்த நிலை மாயை என்று அழைக்கப்படுகிறது. ஹரே கிருஷ்ண என்ற உன்னதமான தெய்வீக சப்தத்தை உச்சரிப்பதால் நமது இதயமும் மனமும் அசுத்தமான விஷயங்களிலிருந்து தூய்மையடைகின்றன. இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரிப்பது கடினமல்ல. இது சமஸ்கிருத மொழியில் இருந்தாலும் எல்லாரும் இதனை சுலபமாக உச்சரிக்கலாம். இந்த சபையில் நாங்கள் இதனைப் பாடத் தொடங்கினோம். நீங்களும் பின்னால் தொடர்ந்து பாடினீர்கள். என்னுடைய எல்லா சீடர்களுமே அமெரிக்கர்கள்; ஒருவர்கூட இந்தியர் அல்ல. (ஸ்ரீல பிரபுபாதர் இந்த உபன்யாசத்தை வழங்கியபோது அவருக்கு அமெரிக்க சீடர்கள் மட்டுமே இருந்தனர்) இருப்பினும் அற்புதமாக இந்த மந்திரத்தைக் கற்றுக் கொண்டார்கள். இது கடினமானது அல்ல; மேலும், இதற்கு பொருட்செலவும் இல்லை.

## ஹரே கிருஷ்ண என்றால் என்ன?

'ஹரே' என்றால் கடவுளின் சக்தி, 'கிருஷ்ண' என்றால் முழுமுதற் கடவுள். ஹரே, கிருஷ்ண, ராம ஆகிய மூன்று வார்த்தைகளே இங்குள்ளன. அவை பதினாறு வார்த்தைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

இந்த மந்திரத்தை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் வேண்டுகிறோம். ஹரே, கிருஷ்ண, ராம-- யார் வேண்டுமானாலும் இந்த மந்திரத்தை மனப்பாடம் செய்து ஜபிக்கலாம். இஃது எல்லாருக்கும் பொதுவானது.

“ஓ! கிருஷ்ண என்பது இந்துக் கடவுளின் பெயர்,” என்று நீங்கள் நினைத்தால், அல்லது உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால், நீங்கள் கிருஷ்ண என்று உச்சரிக்கத் தேவையில்லை. ஆனால் நீங்கள் கண்டிப்பாக கடவுளுக்கென்று ஒரு பெயரை வைத்திருக்க வேண்டும். இஸ்லாமியர்கள் கடவுளை அல்லா என்று அழைக்கின்றார்கள், யூதர்கள் கடவுளை ஜெஹோவா என்று அழைக்கிறார்கள். இறைவனுக்கு கோடிக்கணக்கான திருநாமங்கள் இருப்பதாக சைதன்ய மஹாபிரபு கூறுகிறார். கிருஷ்ண என்ற நாமம் பொருத்தமானதாக இல்லை என்று நீங்கள் கருதினால், நீங்கள் எந்த நாமத்தையேனும் ஒப்புக்கொள்ளலாம். அஃது ஒரு பொருட்டல்ல; நீங்கள் கடவுளின் பெயரை உச்சரிக்க வேண்டும். அதுவே எங்களின் வேண்டுகோள்.


## இது மிகவும் கடினமானதா?

இது கடினமானதே அல்ல. வெவ்வேறு மொழிகளுக்குத் தகுந்தாற் போல, வெவ்வேறு நாடுகளுக்குத் தகுந்தாற் போல, வெவ்வேறு சமுதாயங்களுக்குத் தகுந்தாற் போல, கடவுளுக்குக் கணக்கிலடங்காத திருநாமங்கள் உள்ளன என்று பகவான்




தண்ணீர் என்ற பொருளுக்கும் தண்ணீர் என்ற வார்த்தைக்கும் வேறுபாடு உண்டு; ஆனால் கிருஷ்ணர் என்ற நபருக்கும் கிருஷ்ணர் என்ற வார்த்தைக்கும் வேறுபாடு கிடையாது.

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு கூறியுள்ளார். ஒவ்வொரு நாமமும் கடவுளின் சக்தியை உடையதாய் இருக்கின்றது. கடவுள் பரிபூரணமானவர் என்பதால், கடவுளின் நாமத்திற்கும் கடவுளுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. இருமைகள் நிறைந்த இந்த ஜடவுலகில், *தண்ணீர்* என்ற வார்த்தைக்கும் *தண்ணீர்* என்ற பொருளுக்கும் வித்தியாசம் உள்ளது. *தண்ணீர்* என்ற வார்த்தையிலிருந்து *தண்ணீர்* என்ற வஸ்து வேறுபட்டது. நீங்கள் தாகத்துடன் இருந்தால் "தண்ணீர், தண்ணீர், தண்ணீர்" என்று கூறினால், அது தாகத்தைத் தணிக்காது. உங்களுக்குத் தண்ணீர் என்ற வஸ்து தேவைப்படுகிறது. அதுவே இந்த ஜடத்தின் இயல்பு. ஆனால் ஆன்மீகமாகப் பார்த்தால் கிருஷ்ண, அல்லா, ஜெஹோவா போன்ற திருநாமங்கள் முழுமுதற் கடவுளுக்கு சமமானவை.



நடனத்துடன் இணைந்த ஹரே கிருஷ்ண மஹாமந்திர கீர்த்தனையை அறிமுகம் செய்த பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு

நாங்கள் ஏன் முக்கியமாக ஹரே கிருஷ்ண என்று உச்சரிக்கின்றோம் என்று நீங்கள் கேட்கலாம். இந்த இயக்கத்தைத் துவக்கிவைத்த பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் இந்த திருநாமங்களை உச்சரித்தார். நாங்கள் பகவான் சைதன்யரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம். அவர் ஹரே கிருஷ்ண என்று உச்சரித்ததால் நாங்களும் ஹரே கிருஷ்ண என்று உச்சரிக்கின்றோம். ஆனால் சைதன்ய மஹாபிரபு அவர்கள் பகவானின் எந்த நாமத்தையும் உச்சரிக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்.

## கட்டுப்பாடுகள் கிடையாது

திருநாமத்தைச் சொல்வதற்கு எந்தவித கட்டுப்பாட்டு விதிமுறைகளும் கிடையாது. நீங்கள் கல்வியறிவில் தகுதி பெற வேண்டும் என்பதோ, உங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதோ இல்லை—எந்தவொரு முன்தகுதியும் அவசியமல்ல. நாங்கள் இங்கு பாடத் தொடங்கினோம். நீங்கள் தயாராக இல்லை, இருப்பினும் நீங்கள் எங்களைப் பின்தொடர்ந்து பாடினீர்கள், எங்களோடு நீங்களும் கைதட்டினீர்கள், நடனம் ஆடினீர்கள். நாமத்தைச் சொல்வதற்கு எந்தவித விதிமுறைகளோ கட்டுப்பாடுகளோ கிடையாது. நீங்கள் எளிதாகப் பாடுங்கள், இது மிகவும் சுலபமானது. எந்த நாமத்தை விரும்புகிறீர்களோ அந்த நாமத்தை நீங்கள் உச்சரியுங்கள். நாங்கள் கிருஷ்ண என்னும் திருநாமத்தை விரும்புகின்றோம். நாங்கள் எப்போதும் ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று பாடுகிறோம். தெருவில் நடக்கும்போதும், பேருந்தில் பயணம் செய்யும்போதும், வேலை செய்யும்போதும் நீங்கள் திருநாமத்தை உச்சரிக்கலாம். உங்களுக்கு இதனால் எந்த நஷ்டமும் இல்லை, ஒரு செலவும் இல்லை; ஆனால் இதன் பலன் அளவற்றது. நீங்கள் ஏன் இதை முயற்சி செய்யக் கூடாது? இதுவே எங்கள் வேண்டுகோள்.

**வாழ்வின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமானால், நாம் யார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நம் மனதில் இக்கேள்வி எழாவிடில், நாம் செய்யும் எல்லாச் செயல்களும் தோல்வியிலேயே முடியும்.**

## ஜபம் செய்வதன் அனுகூலம்

ஜபம் செய்வதின் நன்மை என்னவென்றால், படிப்படியாக நீங்கள் யார் என்பதை நீங்களே புரிந்துகொள்வீர்கள். இந்த நவீன நாகரிகம் முழுவதுமே "நான் இந்த உடல்" என்னும் தவறான அபிப்பிராயத்துடன் செயல்பட்டு வருகின்றது. "யார் ஒருவன் தான் இந்த உடல் என்ற எண்ணத்துடன் செயல்படுகிறானோ, அவன் பசுவைக் காட்டிலும் அல்லது கழுதையைக் காட்டிலும் மேலானவனல்ல என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. உண்மையில் நாம் இந்த உடலல்ல, நாம் ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபம் செய்தோமானால் நாம் யார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவ்வாறு புரிந்து கொண்ட உடனேயே நம்முடைய செயல்பாடுகள் வேறாக இருக்கும். தற்போது நாம் இந்த உடல் என்ற அபிப்பிராயத்துடன் செயல்படுகிறோம். இந்த உடல் எந்த இடத்தில் பிறந்ததோ அதை வைத்து, "நான் அமெரிக்கன், நான் இந்தியன், நான் சீனாக்காரன்," என்று நாம் கூறிக் கொண்டுள்ளோம். இந்த உடல் எந்தப் பெண்ணுடன் சம்பந்தப்பட்டுள்ளதோ, அந்தப் பெண்ணை நான் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன். ஆயிரக்கணக்கான பெண்கள் இருந்தாலும், இந்த உடலுடன் உறவு வைத்துள்ள பெண், எனது மனைவி எனப்படுகிறாள். அதேபோல் இங்கு ஆயிரக்கணக்கான குழந்தைகள் உள்ளனர். ஆனால் இந்த உடலுடன் நெருங்கிய உறவு வைத்துள்ள குழந்தையை நான் என் மகன் என்று அழைக்கிறேன். உடல் என்னும் அடையாளம் தவறானது என்பதால், அந்த உடலைச் சார்ந்த அனைத்து அடையாளங்களும் தவறானவை.

## உண்மையான அடையாளம்

நம்முடைய உண்மையான அடையாளம் வேத இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது: *அஹம் ப்ரஹ்மாஸ்மி*, நான் பிரம்மன்; அதாவது, "நான் ஓர் ஆன்மீக ஆத்மா, நான் ஜடம் அல்ல." நான் இந்த உடல் என்னும் தவறான கருத்தை நீக்க வேண்டும். இதனைப் புரிந்துகொள்வது அனைவருக்கும் சாத்தியமல்ல. ஆனால் மனித சமுதாயத்தின் குறைந்த சதவிகித மக்கள் இதனைப் புரிந்து கொண்டால்கூட பல்வேறு பிரச்சனைகள் தீர்க்கப்படும். *அஹம் ப்ரஹ்மாஸ்மி*, நான் ஆன்மீக ஆத்மா என்பதைப் புரிந்துகொள்வது பலதரப்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமையும்.

## பிரச்சனைகளுக்குத் தீர்வு

எப்படி தீர்வுகள் உண்டாகின்றன என்பதை பகவத் கீதை விளக்குகிறது. *அஹம்ப்ரஹ்மாஸ்மி*என்பதைதெளிவாக அறிந்து கொண்டோமானால் மற்ற விஷயங்கள் தாமாகத் தொடர்கின்றன. *ப்ரஹ்ம பூத ப்ரஸன்னாத்மா*, ஒருவர் உடனே சந்தோஷமடைகிறார். நாம் இந்த உடல் சம்பந்தப்பட்ட வாழ்வில் இருக்கும்வரை சந்தோஷமாக இருக்க முடியாது. "நான் இந்த உடலல்ல; ஆன்மீக ஆத்மா" என்பதைப் புரிந்து கொண்டவுடன் நாம் சந்தோஷமடைய முடியும். அப்போது மன சஞ்சலங்கள் இருக்காது. உடல் சார்ந்த எண்ணத்துடன் வாழ்வதால், நமது மனம் துன்பத்தில் உள்ளது. விலையுயர்ந்த காரை வைத்திருக்கும் ஒரு செல்வந்தரை எடுத்துக் கொள்வோம். தெருவில் அந்த காரை அவர் ஓட்டிச் செல்லும்போது, விபத்துக்களைத் தவிர்க்க முயற்சி செய்து காரை அடிபடாமல் பார்த்துக் கொள்வார். அத்தகு மன அழுத்தத்துடன் அவர் பயணம் செய்வார். ஆனால் தெருவில் நடந்து செல்லும் மனிதனுக்கு அந்த மனஅழுத்தம் இருப்பதில்லை. காரில் இருக்கும் மனிதன் ஏன் கவலையுடன் உள்ளார்? ஏனெனில், அவர் தன்னை காருடன் அடையாளப்படுத்திக் கொண்டுள் ளார். அந்த கார் ஒரு விபத்தில் சேதம் அடைந்துவிட்டால், அவர் தனக்குச் சேதம் அடைந்துவிட்டதாக எண்ணி வருத்தப்படுகிறார். காரிலிருந்து அவர் வேறுபட்டவராக இருந்தாலும், அவர் தன்னை காருடன் பொய்யாக அடையாளப்படுத்திக் கொள்வதால் அத்தகு வருத்தம் எழுகின்றது. அதுபோலவே நாம் பொய்யாக இந்த உடலுடன் அடையாளப் படுத்திக் கொள்வதால் நமக்கு பல பிரச்சனைகள் வருகின்றன. எனவே வாழ்வின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமானால், நாம் யார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நம் மனதில் இக்கேள்வி எழாவிடில், நாம் செய்யும் எல்லாச் செயல்களும் தோல்வியிலேயே முடியும்.

## முட்டாளா, சான்றோனா?

ஸ்ரீமத் பாகவதத்தில் (5.5.5), *பராபவஸ் தாவத் அபோத ஜாத:* என்று கூறப்பட்டுள்ளது. *அபோத ஜாத:* என்பது முட்டாளாகப் பிறந்தவனைக் குறிக்கிறது. வாழ்வின் துவக்கத்திலிருந்தே "நாம் இந்த உடல்" என்று நாம் நினைத்து வருவதால், நாம் ஒவ்வொருவரும் முட்டாளாகவே பிறந்துள்ளோம். ஆகவே வேதக் கலாச்சாரத்தின்படி ஒருவர் இரண்டாவது பிறவியெடுத்தல் அவசியம். (வேத சம்ஸ்காரத்தின் மூலம் அடையப்படும் பிறவி இரண்டாவது பிறவி எனப்படும்.) முதல் பிறவி தாய் தந்தையரால் சாத்தியமாகிறது; அவ்வாறு பிறந்தவன், முட்டாளாக, மிருகமாக, கடைநிலையோனாகக் கருதப்படுகிறான். *ஜன்மனா ஜாயதே சூத்ர:* பிறப்பினால்


ஒவ்வொருவரும் சூத்திரர்களாக, அல்லது மனிதர்களில் கடையோராக உள்ளோம். ஆனால் ஸம்ஸ்காராத் பவேத் த்விஜ: “சம்ஸ்காரத்தின் (சீர்திருத்தத்தின்) மூலம் ஒருவர் இருபிறவி எய்தியவராகிறார்.” அஃது என்ன சம்ஸ்காரம்? சம்ஸ்காரத்தின் மூலம், ஒருவர் தான் யார் என்பதைப் புரிந்துகொள்கிறார். பிறகு வேத-பதாத் பவேத் விப்ர:, இரண்டாவது பிறவிக்குப் பிறகு ஆன்மீக விஞ்ஞானத்தை (கடவுளின் விஞ்ஞானத்தைப்) புரிந்துகொள்ள முயற்சிப்பவர் விப்ரர் எனப்படுகிறார். விப்ர என்றால் முழுவதும் தெரிந்தவர் என்று பொருள். கடைசியாக ப்ரஹ்ம ஜானாதீதி ப்ராஹ்மண:, தான் பிரம்மன் அல்லது தான் ஓர் ஆன்மீக ஆத்மா என்பதை ஒருவன் புரிந்துகொள்ளும்போது, அவன் பிராமணன் ஆகின்றான்.

“நான் பிரம்மன், ஜடப்பொருள் அல்ல” என்பதை உணர்ந்துள்ள பிராமணர்கள் சமுதாயத்தில் மிகவும் உயர்ந்தவர்கள் ஆவர். (பிறப்பினால் மட்டும் ஒருவர் பிராமணன் ஆவதில்லை என்பதை கவனித்தல் அவசியம்) பிரம்மனைப் புரிந்துகொள்வதன் மூலம், நீங்கள் பிரஸன்னாத்தமாவாக, மகிழ்ச்சியானவராக மாறுவீர்கள். அதன் பின்னர், ந ஷோசதி ந காங்க்ஷதி:, எந்தவித இழப்பிற்காகவும் நீங்கள் வருந்தமாட்டீர்கள், எந்தப் பொருளையும் அடைவதற்கு ஆசைப்பட மாட்டீர்கள். ஸம: ஸர்வேஷு பூதேஷு, எல்லா உயிர்வாழிகளையும் நீங்கள் சம நிலையில் காண்பீர்கள். மத் பக்திம் லபதே பராம், தெளிவடைந்த அந்நிலை யில் நீங்கள் கடவுளைப் புரிந்துகொள்ள முடியும், கடவுளுடனான உங்களது உறவையும் புரிந்துகொள்ள முடியும்.

## நம்முடைய அடையாளத்தைப் புரிந்துகொள்ளுதல்

இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தின் மூலம் நாம் யார் என்ற கேள்விக்கான பதிலைப் பெற முடியும். உண்மையில் இதற்கான பதில் மிகவும் சுலபமானது. பள்ளிக்கூடம் ஒன்றில் ஒருநாள் நான் உரையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு சிறுவனை என்னருகே அழைத்து, அவனுடைய உடலில் உள்ள பாகங்களைக் காண்பித்து, இஃது என்ன, அஃது என்ன என்று கேட்டேன். அதற்கு அவன், “இஃது எனது கை, எனது கால், எனது தலை, எனது உடம்பு, எனது சட்டை” என்று பதில் கூறினான். பிறகு, “எனது, எனது, என்று கூறுகிறாய்; ஆனால் நீ யார், நீ எங்கிருக்கிறாய்?” என நான் வினவினேன்.

இதைப் புரிந்துகொள்வது மிகவும் எளிது. எனது உடலையும் உடலின் உறுப்புகளையும், நான், “எனது” என நினைக்கின்றேன். அப்படியெனில், நான் யார்? உடலினுள் வசிக்கும் ஆத்மாவே நான். இதனை உணர்ந்த பின்னர், உலகின் பிரச்சனைகளைப் பற்றிய உங்களது அனைத்து கருத்துகளும் பொய்யாகி விடுகின்றன. எனவேதான், இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. சேதோ தர்பன மார்ஜனம், இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரிப்பதால்,




கை, கால், தலை, சட்டை, உடம்பு என அனைத்தும் என்னுடையது என்றால், நான் யார்?—கிருஷ்ண பக்தி இயக்கம் இதனை அறிய உதவுகிறது

உங்களின் மனம் தூய்மையடையும். *பவமஹாதாவாக்னி நிர்வாபனம்,* மனம் தூய்மையடைந்து உங்களை நீங்கள் புரிந்து கொண்ட உடனேயே, சமுதாயம், அரசியல், பொருளாதாரம், போன்ற எல்லாப் பிரச்சனைகளும் தீர்க்கப்படுகின்றன. *ஷ்ரேய: கைரவ-சந்த்ரிகா விதரணம்,* படிப்படியாக நீங்கள் உன்னத வாழ்க்கையை உணர்ந்து கொள்ளலாம்.

## அதிகாரியை ஏற்பதன் அவசியம்

இந்த இயக்கம் முற்றிலும் விஞ்ஞானப்பூர்வமானது, எங்களிடம் அதிகாரப்பூர்வமான தகவல்கள் இருக்கின்றன. நீங்கள் இவற்றை மறுக்க முடியாது. நீங்கள் உங்களுடைய வாழ்வின் துவக்கத்திலிருந்தே, மற்றொரு அதிகாரியை ஏற்று செயல்பட்டு வந்துள்ளீர்கள். நீங்கள் குழந்தையாக இருந்தபோது, "அப்பா, அம்மா, இஃது என்ன?" என்று வினவினீர்கள், அதிகாரியை மீறி நீங்கள் ஒரு காலடிகூட எடுத்துவைக்க முடியாது. அதிகாரியின் அறிவுரைப்படியே நீங்கள் மோட்டார் வாகனத்தை ஓட்டிச் செல்ல முடியும். அதிகாரியை உங்களால் மீற முடியாது.

## உண்மையான அதிகாரியின் அறிகுறிகள்

ஆன்மீக விஷயத்திலும் நீங்கள் அதிகாரியைப் பின்பற்ற வேண்டும். ஆனால் பிரச்சனை என்னவெனில், யார் அந்த ஆன்மீக அதிகாரி? உண்மையான அதிகாரி யார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆன்மீக அதிகாரியாக இருப்பவர் தவறு செய்யாதவராக இருக்க வேண்டும்; அவர் மாயையால் கவரப்படாதவராக இருக்க வேண்டும்; அவர் ஏமாற்றுபவராக இருக்கக் கூடாது; அவருடைய புலன்கள் நேர்த்தியானவையாக, குறையற்றவையாக இருக்க வேண்டும்--இதுவே ஆன்மீக அதிகாரியின் அறிகுறிகள்.

ஒரு கட்டுண்ட ஆத்மா நிச்சயமாகத் தவறுகள் செய்வான். அவன் எவ்வளவு கற்றவனாக இருந்தாலும், எவ்வளவு முன்னேற்றம் அடைந்தவனாக இருந்தாலும், அவன் தவறு செய்பவனாகவே இருப்பான், அதனால் தான் "தவறுவது மனித இயல்பு" என்று சொல்லப்படுகிறது. மேலும் ஒவ்வொருவரும் மாயையால் கவரப்பட்டவர்கள். அதுமட்டுமின்றி ஏமாற்றும் குணமும் அனைவரிடமும் உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக உங்களின் புலன்கள் குறைபாடுகள் உள்ளவை. உங்கள் கண்களைப் பற்றி நீங்கள் பெருமைப்படுகிறீர்கள். "நான் பார்க்க வேண்டும்" என்று விருப்பப்படுகிறீர்கள். ஆனால் உங்களால் எதைப் பார்க்க முடியும்? சூரியன் இல்லாவிட்டால், விளக்கு அணைக்கப்பட்டால், உடனேயே உங்களுடைய பார்க்கும் திறன் போய் விடுகிறது. சில நிபந்தனைகளுடன் தான் நம்மால் பார்க்க முடியும், எனவே நமது பார்க்கும் திறமையானது குறைபாடுகள் கொண்டதாகும்.

குறைகளையுடைய புலன்களாலோ மனக் கற்பனைகளாலோ குற்றமற்ற பூரண ஞானத்தைப் பெற முடியாது. நீங்கள் ஓர் அதிகாரியை ஒப்புக்கொள்ள வேண்டும். உங்கள் தகப்பனார் யார் என்பதை நீங்கள் அறிய விரும்பினால், அதற்கான அதிகாரி உங்களுடைய தாயார் மட்டுமே. "இவர்தான் உன்னுடைய தந்தை," என்று உங்கள் தாய் கூறினால், நீங்கள் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். உங்களால் ஆராய்ச்சி செய்ய முடியாது.

அதே போல உண்மையான ஞானத்தைப் பெறுவதற்கு, நீங்கள் ஓர் அதிகாரியை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் அந்த அதிகாரி கட்டுண்ட ஆத்மாவாக இருக்கக் கூடாது. அதாவது, அவர் ஏமாற்றுக்காரராக, குறைபாடுகளுடைய புலன்களுடையவராக, குற்றங்களை இழைப்பவராக, மாயைக்கு உட்படுபவராக இருக்கக் கூடாது. பக்குவமான அதிகாரியிடமிருந்து நீங்கள் ஞானத்தைப் பெற்றால், உங்கள் அறிவு பூரணமானதாக இருக்கும். அதுவே வழிமுறை.

## வேத இலக்கியங்களின் அதிகாரத் தன்மை

எம்மிடம் அதிகாரப்பூர்வமான வேத இலக்கியங்கள் உள்ளன. நியாயம், தர்க்கம், தத்துவம் என எப்படி வேண்டுமானாலும் நீங்கள் சோதனை செய்து பார்க்கலாம். தத்துவ, விஞ்ஞான அடிப்படை இல்லாத மதம், வெறும் உணர்ச்சியே. தத்துவ அடிப்படையிலும் விஞ்ஞான ஆதாரத்திலும் செயல்படும் மதமே சரியான மதம்.

பகவத் கீதை ஓர் அதிகாரப்பூர்வமான புத்தகம். எல்லா கேள்விகளுக்கும் எந்த மாதிரியான சந்தேகங்களுக்கும் மிக அருமையான பதிலை பகவத் கீதை அளிக்கிறது. உதாரணமாக, பகவத் கீதையில் (14.4) கிருஷ்ணர் கூறுகிறார்:

*ஸர்வ-யோனிஷு கௌந்தேய*
*மூர்தய: ஸம்பவந்தி யா:*
*தாஸாம் ப்ரஹ்ம மஹத் யோனிர்*
*அஹம் பீஜ-ப்ரத: பிதா*

நீர்வாழ் இனங்கள், செடிகொடிகள், மரங்கள், புழுக்கள், பூச்சிகள், பறவைகள், மிருகங்கள், கடைசியாக மனித இனங்கள் என 84,00,000 வகையான உயிரினங்கள் இருப்பதாக வேத இலக்கியங்கள் கூறுகின்றன. "நானே எல்லா ஜீவராசிகளுக்கும் விதையளிக்கும் தந்தை" என்று கிருஷ்ணர் கூறுகிறார். நீங்கள் இந்த ஒரு ஸ்லோகத்தைப் புரிந்து கொண்டால், உலக சகோதரத்துவத்தை அறியலாம். உலக சகோதரத்துவத்தை அடைய வேண்டுமெனில், இப்பிரபஞ்சத்தின் தந்தையினை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதுபோன்ற கேள்விகள் அனைத்திற்கும் பகவத் கீதையில் பதில் உள்ளது. இப்புத்தகங்கள் மனித சமுதாயத் திற்கானவை. அவற்றில் கொடுக்கப்பட்டிருக்கும் ஞானத்தைப் பயன்படுத்திக் கொண்டால், ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபம் செய்தால், உங்கள் வாழ்க்கை மேன்மையடையும்; நீங்களும் பூரண ஞானத்தைப் பெற்று, பூரண ஆனந்தத்தை அடைவீர்கள். உங்கள் ஆன்மீக வாழ்வில் எவ்வாறு முன்னேற்றம் அடைகின்றீர்கள் என்பதை நீங்களே காணலாம். மிக்க நன்றி.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)




**இறை விஞ்ஞானத்தை உணர்வதும் தேவையற்ற வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விடுபடுவதும் உண்மையான விருப்பமுடையவர்களுக்கு கடினமல்ல. ஆனால் சரணடையாமல் உபயோகமற்ற கற்பனையில் ஈடுபடும் நபர்களுக்கு அவை மிகவும் கடினமானவை. (ஸ்ரீமத் பாகவதம் 2.7.47, பொருளுரையிலிருந்து)**








## கருத்து

**உயர்ந்த வரத்தினை வழங்க பகவான் தயாராக உள்ளபோதிலும், பணம், சொத்து, நல்ல குடும்ப வாழ்க்கை போன்ற சுமைகளை மட்டுமே நாம் அவரிடம் வேண்டிக் கொண்டுள்ளோம். அத்தகு பௌதிக ஆசைகள் அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டியவை.**

**பிறவிதோறும் பகவானின் தொண்டை மட்டுமே நாம் வேண்ட வேண்டும் என்று ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு நமக்குக் கற்றுத் தந்துள்ளார்.**






பௌமாசுரன் என்னும் நரகாசுரன், கிருஷ்ணரால் கொல்லப்பட்ட திருநாள், தீபாவளியாகக் கொண்டாடப்பட்டு வரும் இவ்வேளையில், நரகாசுரன் எவ்வாறு, ஏன் கிருஷ்ணரால் கொல்லப்பட்டான் என்பதை இங்கு காண்போம்.

பௌமாசுரன் என்னும் அசுரன், பல்வேறு மன்னர்களின் அரண்மனை களிலிருந்து 16,000 அரச குமாரியரைக் கடத்திச் சென்று சிறைப்படுத்தியதையும், அற்புத குணங்கள் நிறைந்த முழுமுதற் கடவுள் கிருஷ்ணரால் அவன் கொல்லப் பட்டதையும் ஸ்ரீமத் பாகவதத்தில் பரீக்ஷித் மகாராஜாவிற்கு சுகதேவ கோஸ்வாமி விளக்கியுள்ளார். பொதுவாக எல்லா அசுரர்களும் தேவர்களுக்கு எதிராகவே செயல்படுவார்கள். இந்த பௌமாசுரன் மிகுந்த பலத்தைப் பெற்றபோது, வருணனின் சிம்மாசனத்திலிருந்த குடையை வலுக்கட்டாயமாகப் பிடுங்கி யிருந்தான்; தேவர்களின் தாயான அதிதியின் காதணிகளை அபகரித்திருந் தான்; மேலும், ஸ்வர்க லோகத்தைச் சார்ந்த மேரு மலையின் ஒருபகுதியான மணி-பர்வதத்தையும் அவன் கைப்பற்றி யிருந்தான். எனவே, பௌமாசுரனைப் பற்றி பகவான் கிருஷ்ணரிடம் முறையிடு வதற்காக தேவராஜனான இந்திரன் துவாரகைக்கு வந்தான்.

ஸ்வர்க லோக மன்னனான இந்திரனின் முறையீடுகளைச் செவியுற்ற பகவான் கிருஷ்ணர் தனது துணைவியரான சத்யபாமா சமேதராக உடனடியாக பௌமாசுரனின் இருப்பிடத்தை நோக்கிப் புறப்பட்டார். (நரகாசுரனின் தாயான பூமாதேவியின் அனுமதியுடன் மட்டுமே அவன் கொல்லப் படுவான் என்ற வரத்தை கிருஷ்ணர் பூமித்தாய்க்கு வழங்கியிருந்தார். பூமாதேவி சத்யபாமாவின் அம்சம் என்ற காரணத்தினால், நரகாசுரனுடன் போர் புரிய வந்த கிருஷ்ணர் சத்யபாமாவையும் உடன் அழைத்து வந்தார்.) இருவரும் கருடவாகனத்தில் அமர்ந்து பௌமாசுரனின் தலைநகரமான பிராக்ஜோதிஷபுரத்தை அடைந்தனர். பாதுகாப்பான அரண்களைக் கொண்ட அந்த நகரத்தினுள் செல்வது எளிதான காரியமல்ல. முதலில், நகரின் நான்கு திசைகளுக்கும் பாதுகாப்பாக பலம் மிக்க அரண்கள் அமைந்திருந்தன; பலம் மிக்க சேனைகள் அவற்றைக் காவல்காத்து வந்தன. அதனையடுத்து, நகரத்தைச் சுற்றி ஆழமான அகழிகள் அமைக்கப்பட்டிருந்தன. அது மட்டுமின்றி, நகரத்தைச் சுற்றிலும் மின்சாரம் பாய்ந்த கம்பிகள் இடப்பட்டிருந்தன. அடுத்தபடியாக, அனிலம் என்ற வாயுப்பொருள் பாதுகாப்பிற்காக நிரப்பப்பட்டிருந்தது. அதன்பின், முரன் என்ற அசுரனால் நிர்மாணிக்கப்பட்ட அபாயகரமான கம்பிகளைக் கொண்ட வேலி, நகரைச் சுற்றிப் போடப்பட்டிருந்தது. இவ்வாறாக இன்றைய விஞ்ஞான முன்னேற்றத்தின்படி பார்த்தாலும் அந்நகரம் மிகவும் திறமையாக பாதுகாக்கப்பட்டிருந்ததைப் போல தோன்றியது.

கிருஷ்ணர் அங்கு வந்தவுடன், அவர் தமது கதாயுதத்தின் தாக்குதல்களால் அனைத்து பலமான கோட்டைகளையும் நொறுக்கினார், அவர் விடுத்த அம்பு மழை பலமான படைகளை அங்குமிங்கும் விரட்டியடித்தது. தமது புகழ்மிக்க சுதர்சன சக்கரத்தைப் பிரயோகித்து, அவர், மின்சார வேலிகளைச்செயலற்றுப் போகச் செய்தார், அகழிகளையும் வாயுக்களின் பாதுகாப்பையும் அழித்தார், முராசுரனால் அமைக்கப்பட்டிருந்த மின்சார இணைப்பு களைத் துண்டுதுண்டாக வெட்டி எறிந்தார். அவர் எழுப்பிய சங்கநாதம் மாவீரர்களின் இதயத்தை மட்டுமின்றி அவர்களின் போர்க் கருவிகளையும் உடைத்தது. அதே போன்று, தனது வெல்வதற்கரிய கதாயுதத்தைக் கொண்டு நகரை வளைத்திருந்த கோட்டையின் சுவர்களை நிர்மூலமாக்கினார்.

கிருஷ்ணர் எழுப்பிய சங்கொலி பிரளயத்தின் இடியைப் போல் ஒலித்தது. அவ்வோசையைக் கேட்ட முராசுரன் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து, என்ன நடக்கிறதென்பதை காண்பதற்காக வெளியே வந்தான். ஐந்து தலைகளைக் கொண்டிருந்த அவன் நீண்ட காலமாக நீரினுள் வசித்து வந்தான். முராசுரன் பிரளய காலத்து சூரியனைப் போல் பிரகாசித்தான், கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போன்ற கோபத்துடன் இருந்தான். வெறும் கண்களால் காண இயலாத அளவிற்கு அவனது மேனி மிகவும் பிரகாசமாக இருந்தது. வெளியே வந்ததும் அவன் திரிசூலத்தை ஏந்தியபடி முழுமுதற் கடவுளை நோக்கி விரைந்தான். முராசுரன் கடுமையான தாக்குதலில் ஈடுபட்ட போது கருடனைத் தாக்க வரும் ஒரு பெரிய பாம்பினைப் போன்று காட்சியளித்தான். மிகுந்த கோப மடைந்திருந்த அவன் மூவுலகத்தையும் விழுங்கத் தயாராக இருப்பதைப் போலத் தோன்றியது. முதலில் கிருஷ்ணரின் வாகனமான கருடனைத் தாக்குவதற்காக திரிசூலத்தை சுழற்றி வீசினான், அவன் தனது ஐந்து வாய்களாலும் சிங்கம்போல கர்ஜித்தான். அவன் எழுப்பிய கர்ஜனை வாயுமண்டலம் மூலமாக உலகெங்கிலும் பரவி, விண்வெளியில் எதிரொலித்து, பத்துத் திசைகளையும் சென்றடைந்து பிரபஞ்சம் முழுவதிலும் கடகடவென ஒலித்தது.



கிருஷ்ணரின் சங்கொலியைக் கேட்ட ஐந்து தலை கொண்ட முராசுரன் கடுங்கோபம் கொண்டு திரிசூலத்தினால் கருடனைத் தாக்க விரைந்தான்

முராசுரனின் திரிசூலம் தம் வாகனமான கருடனை நோக்கி வருவதைக் கண்ட பகவான் கிருஷ்ணர், உடனடியாக இரண்டு அம்புகளைப் பிரயோகித்துத் தம் கரத்தின் திறமையால் திரிசூலத்தைக் கண்ட துண்டமாகச் செய்தார். அதே சமயத்தில், பல அம்புகளைப் பயன்படுத்தி முராசுரனின் வாய்களைத் துளைத்தார். முழுமுதற் கடவுளால் வெற்றிகொள்ளப்படுவதைக் கண்ட முராசுரன் உடனடியாக கடுங் கோபத்துடன் பகவானைத் தனது கதாயுதத்தால் அடிக்க முயன்றான். ஆனால் முரனின் கதாயுதம் தன்னை அணுகுவதற்கு முன்பே பகவான் கிருஷ்ணர் அதனைத் தனது கதையைக் கொண்டு உடைத்து நொறுக்கினார். ஆயுதங்களை இழந்த அசுரன், பலம் வாய்ந்த தனது கரங்களால் கிருஷ்ணரைத் தாக்க முற்பட்டான். ஆனால் கிருஷ்ணர் தம் சுதர்சன சக்கரத்தின் உதவியுடன் அசுரனின் ஐந்து தலைகளையும் அவனது உடலிலிருந்து வெட்டி வீழ்த்தினார். இந்திரனின் வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட பெரும் மலையின் சிகரத்தைப் போல் அசுரன் நீரினுள் வீழ்ந்தான்.

முராசுரனுக்கு தாம்ரன், அந்தரிக்ஷன், ஷ்ரவணன், விபாவஸு, வஸு, நபஸ்வான், அருணன் ஆகிய ஏழு குமாரர்கள் இருந்தனர். செருக்குற்றிருந்த அவர்கள் தங்கள் தந்தையின் மரணத்துக்குப் பழிவாங்க எண்ணி, மிகுந்த கோபத்துடன் கிருஷ்ணரோடு போரிட ஆயத்தமானார்கள். அதற்கான ஆயுதங்களைச் சேகரித்துக் கொண்டு பீடன் என்ற அசுரனைப் படைத் தளபதியாக நியமித்தார்கள். பௌமாசுரனின் கட்டளையின்படி அவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் கிருஷ்ணரைத் தாக்கினார்கள்.

அவர்கள் கிருஷ்ணரின் முன்பு வந்த போது, வாள், கதை, ஈட்டி, அம்பு, சூலம் போன்ற பல வகையான ஆயுதங்களை அவர்மீது பொழிந்தனர்.

ஆனால் முழுமுதற் கடவுளின் சக்தி அளவிட முடியாதது என்றும் வெல்ல இயலாதது என்றும் அவர்கள் அறியார்கள். கிருஷ்ணர் தம் அம்புகளால் பௌமாசுரனின் படைவீரர்களின் எல்லா ஆயுதங்களையும் தானியங்களைப் போல் சிதறடித்தார். கிருஷ்ணர் தனது ஆயுதங்களைப் பிரயோகிக்க, பௌமாசுரனின் படைத் தலைவனான பீடனும் அவனது உதவியாளர்களும் தலைகளை இழந்து, போர் உடைகளை இழந்து, கால்கள், கைகள், தொடைகள் துண்டிக்கப்பட்டு விழுந்தனர். அவர்கள் அனைவரும் மரணத்தின் அதிபதியான எமராஜரிடம் அனுப்பப்பட்டனர்.

பூமாதேவியின் குமாரனான பௌமாசுரனுக்கு நரகாசுரன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. தனது சேனாதிபதிகளும் வீரர்களும் முழுமுதற் கடவுளின் ஆயுதங்களால் போர்க்களத்தில் கொல்லப்பட்டதைக் கண்ட அவன், பகவானிடம் அதிபயங்கர கோபம் கொண்டான். பின்னர் அவன் மாபெரும் யானைப் படையுடன் நகரைவிட்டு வெளியே வந்தான். அந்த யானைகள் எல்லாம் கடல் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவை. அவை அனைத்தும் மிகுந்த போதையில் இருந்தன. அவை வெளியே வந்த போது பகவான் கிருஷ்ணரும் அவரின் தேவியும் விண்வெளியில் உயர்ந்த இடத்தில் அழகாக வீற்றிருக்கக் கண்டன; கிருஷ்ணர் சூரியனையொட்டிய கருமேகம் போல் ஒளிர்ந்தார். நூற்றுக்கணக்கான போர் வீரர்களை ஒரே வீச்சில் கொல்லக்கூடிய சதக்னீ என்ற ஆயுதத்தை பௌமாசுரன் உடனடியாக விடுத்தான். அதேசமயத்தில் அசுரனின் உதவியாளர்களும் தத்தம் ஆயுதங்களை முழுமுதற் கடவுளை நோக்கி வீசினார்கள். இறகுகளுடன் கூடிய தனது அம்புகளின் மூலம் அவர்களின் அஸ்திரங்களையெல்லாம் பகவான் கிருஷ்ணர் முறியடித்தார். இப்போரின் விளைவாக பௌமாசுரனின் படைவீரர்களும் படைத்தளபதிகளும், கைகள், கால்கள், மற்றும் தலைகளை இழந்தவர்களாக பூமியில் விழுந்தனர். அவர்களுடன் அவர்களின் குதிரைகளும் யானைகளும் வீழ்ந்தன. இவ்வாறாக, பௌமாசுரன் பிரயோகித்த அனைத்து ஆயுதங்களும் இறைவனின் அம்புகளால் துண்டிக்கப்பட்டன.

இறைவன் கருடனின் முதுகில் வீற்றிருந்தபடியே போரிட்டார். அவருக்கு உதவும் வகையில் கருடனும் தன் இறக்கைகளால் குதிரைகளையும் யானைகளையும் அடித்தார்; தன் கூரிய நகங்களாலும் கூர்மையான அலகாலும் அவற்றின் தலைகளில் ரணங்களையும் ஏற்படுத்தினார். கருடனின் தாக்குதல்களால் ஏற்பட்ட வலியைப் பொறுக்க முடியாமல் யானைகள் போர்க்களத்தை விட்டு ஓடத் தொடங்கின. பௌமாசுரன் மட்டும் தனித்து நின்று கிருஷ்ணருடன் போரிட்டான். தனது படைவீரர்களும் யானைகளும் கிருஷ்ணரின் வாகனமான கருடனால் பெரும் தொல்லைகளுக்கு உட்பட்டதைக் கண்ட பௌமாசுரன், மிகுந்த கோபம் கொண்டு தன் முழு பலத்தையும் பிரயோகித்துக் கருடனைத் தாக்கினான். அந்தத் தாக்குதல் இடியின் பலத்தையும் மிஞ்சியதாக இருந்தது. ஆனால் கருடன் சாதாரண பறவையல்ல என்பதால், பௌமாசுரனின் அடிகளையெல்லாம் பெரிய யானையின் மீது மலர் மாலைகள் விழுவதைப் போல உணர்ந்தார்.

தன் தந்திரங்கள் எதுவும் கிருஷ்ணரிடம் பலிக்காது என்பதை அறிந்த பௌமாசுரன், கிருஷ்ணரைக் கொல்வதற்கான தனது எல்லா முயற்சிகளும் விரக்தியில் முடியும் என்பதை உணர்ந்தான். இருப்பினும், இறுதி முயற்சியாக அவன் ஒரு திரிசூலத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவரை நோக்கிப் பாய்ந்தான். கிருஷ்ணர் வெகு சாமர்த்தியமாக, பௌமாசுரன் தனது சூலத்தை எறிவதற்கு முன்பாகவே, தனது சுதர்சன சக்கரத்தால் அசுரனின் தலையை வெட்டி வீழ்த்தினார். (பௌமாசுரன் சூலத்துடன் கிருஷ்ணரை நோக்கி வருவதைக் கண்ட சத்யபாமா, ''அவனைக் கொல்லுங்கள்'' என்று கூற கிருஷ்ணரும் அவனைக் கொன்றதாக ஆச்சாரியர்கள் விளக்குகின்றனர்) குண்டலங்களாலும் கிரீடத்தினாலும் அலங்கரிக்கப்பட்டு பிரகாசமாக விளங்கிய அசுரனின் தலை போர்க்களத்தில் வீழ்ந்தது. பகவான் கிருஷ்ணரால் பௌமாசுரன் கொல்லப்பட்ட போது, அவனது உறவினர்கள் மனமுடைந்து கதறினர், சாதுக்கள் இறைவனின் வீரதீரச் செயல்களைப் புகழ்ந்தனர். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட ஸ்வர்க லோக வாசிகள் இறைவனின் மீது பூமாரி பொழிந்தார்கள்.

அச்சமயம் பகவான் கிருஷ்ணரின் முன்பு தோன்றிய பூமாதேவி வைஜயந்தி மாலையை அவருக்கு அணிவித்து அவரை வணங்கினாள். தங்கத்தாலும்



திரிசூலத்தினால் கிருஷ்ணரைத் தாக்க வந்த நரகாசுரன் கிருஷ்ணரின் சுதர்சன சக்கரத்தினால் வீழ்த்தப்படுதல்

**அசைவன, அசையாதவை என அனைத்தும் கிருஷ்ணரையே சார்ந்துள்ளன. அனைத்தும் கிருஷ்ணரால் படைக்கப்பட்டது என்பதால், எதையும் அவரிடமிருந்து பிரிக்க முடியாது. இருப்பினும் அவர் எல்லாவற்றையும் கடந்து திவ்யமான தளத்தில் இருப்பதால், பௌதிகமான எதையும் அவருடன் அடையாளம் காண முடியாது. இவ்வாறாக அனைத்துமே கிருஷ்ணருடன் ஒரே சமயத்தில் ஒன்றுபட்டும் வேறுபட்டும் விளங்குகின்றன.**

கற்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அதிதியின் பிரகாசமிக்க காதணிகளையும், வருணனின் குடையையும் பூமாதேவி கிருஷ்ணரிடம் திருப்பித் தந்தாள். மேலும், மற்றொரு மதிப்புமிக்க மணியையும் அவள் கிருஷ்ணருக்குப் பரிசாக அளித்தாள். பின்னர், பிரபஞ்சத்தின் சுவாமியும் மிகவுயர்ந்த தேவர்களால் எப்போதும் வழிபடப்படுபவருமான முழுமுதற் கடவுளான கிருஷ்ணரை நோக்கி பூமாதேவி பிரார்த்திக்கலானாள். விழுந்து வணங்கி இறைவனை நமஸ்கரித்த அவள் மிகுந்த பக்திப் பரவசத்துடன் பேசத் தொடங்கினாள்.

"சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகிய நான்கு சின்னங்களை எப்போதும் தரித்தவரும், தேவர்களுக்கெல்லாம் இறைவனான உமக்கு நான் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்; ஏற்றுக் கொள்வீராக. அன்பார்ந்த பிரபுவே, பரமாத்மாவான தாங்கள் உமது பக்தர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக பல்வேறு தெய்வீக ரூபங்களில் இப்பூமியில் தோன்றுகிறீர். எனது பணிவான வணக்கங்களை ஏற்று அருள்புரிவீராக.

"எம்பெருமானே, உமது நாபியிலிருந்து தாமரை மலர் தோன்றுகிறது, நீவீர் எப்போதும் தாமரை மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறீர். உமது கண்கள் தாமரை மலரின் இதழ்களைப் போல் விரிந்திருப்பதால், பார்ப்பதற்கு அவை அழகாக விளங்குகின்றன. மென்மையான உமது தாமரைத் திருவடிகள் உமது களங்கமற்ற பக்தர்களால் எப்போதும் வழிபடப்படுகின்றன, அந்த தாமரைத் திருவடிகள் பக்தர்களின் தாமரை போன்ற மென்மையான இதயங்களுக்குத் திருப்தியளிக்கின்றன. எனவே, நான் உமக்குப் பன்முறை வணக்கம் செலுத்துகிறேன்.

"அழகு, பலம், புகழ், செல்வம், அறிவு, துறவு ஆகியவற்றை நீர் முழுமையாகப் பெற்றிருக்கிறீர்; இந்த ஆறு ஐஸ்வர்யங்களின் இருப்பிடம் தாங்களே. தாங்கள் எங்கும் வியாபித்திருந்தாலும் வசுதேவரின் மகனாகத் தோன்றியுள்ளீர். எனவே, தயைகூர்ந்து எனது பணிவான வணக்கங்களை ஏற்பீராக. ஆதி மூலமான முழுமுதற் கடவுள் நீரே, எல்லா காரணங்களுக்கும் உன்னத காரணமும் நீரே. ஞானத்தின் களஞ்சியம் தாங்களே. உமக்கு எமது பணிவான வணக்கங்கள். பிறப்பற்றவரான தாங்கள் மொத்த பிரபஞ்சத் தோற்றத்திற்கும் தந்தையாக விளங்குகிறீர். பலதரப்பட்ட சக்திகளின் உறைவிடம் தாங்களே. இவ்வுலகம் தோன்றுவதற்குத் தாங்களே காரணம், பிரபஞ்சத் தோற்றத்தின் காரணமும் விளைவும் நீரே. தயவுசெய்து என் வணக்கங்களை ஏற்றுக் கொள்வீராக.

"எம்பெருமானே, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று தேவர்களும் உம்மைச் சார்ந்தவர்களே. இப்பிரபஞ்சத்தைப் படைப்பதற்கான அவசியம் ஏற்படும் போது உமது ரஜோ குணத் தோற்றமான பிரம்மாவைப் படைக்கிறீர். பிரபஞ்சத்தைக் காப்பதற்கு தாங்கள் விரும்பும் போது ஸாத்வீகத்தின் உறைவிடமான விஷ்ணுவாக உம்மை நீர் வியாபித்து அருள்கிறீர். அதுபோலவே தமோ குணத்தின் அதிபதியான சிவபெருமானாகத் தோன்றி நீர் படைப்பு முழுவதையும் அழியச் செய்கிறீர். ஜட இயற்கையின் முக்குணங்கள் உங்களால் படைக்கப்பட்ட போதிலும், தாங்கள் தங்களது திவ்யமான நிலையில் எப்போதும் வீற்றுள்ளீர். சாதாரண உயிர்வாழிகள் ஜட இயற்கையின் குணங்களில் பந்தப்படுகின்றனர், ஆனால் தாங்கள் ஒருபோதும் அவ்வாறு சிக்கிக் கொள்வதில்லை.

"எம்பெருமானே, உண்மையில் தாங்களே ஜட இயற்கை, தாங்களே இப்பிரபஞ்சத்தின் தந்தை, இயற்கையின் மூலக்கூறுகள் இணைந்து பௌதிக உலகம் தோன்றுவதற்கு காரணமான காலமும் தாங்களே. இருப்பினும் இந்த ஜடச் செயல்களுக்கெல்லாம் தாங்கள் அப்பாற்பட்டவர். பிரபுவே, முழுமுதற் கடவுளே, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், புலனின்பப் பொருள்கள், மனம், புலன்கள், புலன்களுக்கான தேவர்கள், அஹங்காரம், மொத்த ஜட சக்தி என இப்பௌதிக உலகிலுள்ள அசையும், அசையாத அனைத்தும் தங்களையே சார்ந்துள்ளன என்பதை நான் அறிவேன். அனைத்தும் தங்களாலேயே படைக்கப்பட்டது என்பதால், எதையும் தங்களிடமிருந்து பிரிக்க முடியாது. இருப்பினும் தாங்கள் எல்லாவற்றையும் கடந்து திவ்யமான நிலையில் இருப்பதால், பௌதிகமான எதையும் உம்முடன் அடையாளம் காண முடியாது. இவ்வாறாக, அனைத்துமே ஒரே சமயத்தில் தங்களுடன் ஒன்றுபட்டதாகவும்



நரகாசுரனைக் கொன்ற பின்னர், அவனால் அடைத்து வைக்கப்பட்டிருந்த 16,100 அரச குமாரிகளை கிருஷ்ணர் விடுவித்தல்

வேறுபட்டதாகவும் உள்ளன; அனைத்தையும் தங்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதற்கு முயற்சி செய்யும் தத்துவ ஞானிகள் நிச்சயமாகத் தவறான கண்ணோட்டத்தை உடையவர்கள்.

“அன்பான பிரபுவே, பகதத்தன் என்ற பெயரையுடைய இச்சிறுவன் என் மகனான பௌமாசுரனின் மகன். தன் தந்தையின் கோர மரணம் இவனை வெகுவாகப் பாதித்திருப்பதால், இவன் மிகவும் குழப்பமடைந்து நிலை புரியாமல் அச்சம் கொண்டிருக்கிறான். எனவே, உமது பாதகமலங்களில் சரணடைவதற்காக நான் இவனை அழைத்து வந்திருக்கிறேன். இச்சிறுவனுக்கு அடைக்கலமளித்து தங்களது தாமரைத் திருவடிகளால் ஆசிர்வதிக்கும்படி நான் வேண்டுகிறேன். தந்தையின் பாவச் செயல்களின் விளைவுகளிலிருந்து இவன் விடுபட வேண்டும் என்பதற்காக இவனை நான் உம்மிடம் அழைத்து வந்திருக்கிறேன்.”

பூமித் தாயின் பிரார்த்தனைகளைக் கேட்ட பகவான் கிருஷ்ணர், எல்லா அபாயங்களிலிருந்தும் பாதுகாப்புத் தருவதாக அவளிடம் உறுதி கூறினார். “பயப்படாதே” என்று அவர் பகதத்தனிடம் கூறினார். பின்னர், எல்லாவித செல்வங்களும் மிகுந்திருந்த பௌமாசுரனின் மாளிகைக்குள் கிருஷ்ணர் பிரவேசித்தார். அந்த மாளிகையில் பௌமாசுரனால் கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த 16,100 இளம் அரச கன்னியரை பகவான் கிருஷ்ணர் கண்டார். புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் கிருஷ்ணர் மாளிகையினுள் நுழைவதைக் கண்ட அந்த இளவரசியர்கள், உடனடியாக அவரின் அழகால் கவரப்பட்டு, அவரது காரணமற்ற கருணையை வேண்டிப் பிரார்த்தித்தார்கள். அவர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி கிருஷ்ணரைத் தம் கணவராக மனதினுள் வரித்துக் கொண்டனர். ஒவ்வோர் அரச குமாரியும் கிருஷ்ணர் தனக்குக் கணவராக அமையவேண்டுமென்று விதியை வேண்டிக் கொண்டாள். கலப்பற்ற பக்தியுடன் தங்களது இதயங்களைக் கிருஷ்ணரின் பாதகமலங்களில் ஆர்வத்துடனும் தீவிரத்துடனும் அவர்கள் சமர்ப்பித்தார்கள். எல்லாருடைய இதயத்திலும் பரமாத்மாவாக வீற்றுள்ள கிருஷ்ணர் அவர்களது களங்கமற்ற விருப்பத்தை புரிந்து கொண்டார், அவர்களைத் தம் மனைவியராக ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார். தகுதியான ஆடைகளையும் ஆபரணங்களையும் அவர்களுக்கு ஏற்பாடு செய்து, ஒவ்வொருவரையும் தனித்தனி பல்லக்கில் அமரச் செய்து துவாரகைக்கு அனுப்பி வைத்தார். மேலும், அம்மாளிகையில் இருந்த அபரிமிதமான செல்வத்தையும் அற்புதமான ரதங்கள், குதிரைகள், ஆபரணங்கள் போன்றவற்றையும் கிருஷ்ணர் சேகரித்தார். நான்கு கொம்புகளைக் கொண்ட ஐம்பது வெள்ளை யானைகளையும் மாளிகையிலிருந்து எடுத்த கிருஷ்ணர், அவையனைத்தையும் துவாரகைக்கு அனுப்பி வைத்தார்.

# தீபாவளி—மேலும் சில தகவல்கள்

நரகாசுரனை பகவான் கிருஷ்ணர் வதம் செய்த திருநாள் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. தீபாவளித் திருநாள் மேலும் பல விசேஷங்களைக் கொண்டதாகும். வாமன அவதாரம் எடுத்த இறைவன், பலி சக்ரவர்த்தியிடமிருந்து மூன்று அடி நிலத்தைக் கேட்டு, அதன் மூலம் மூவுலகத்தையும் அளந்ததும் இந்த நாளில் நடந்ததுவே. இராவணனை வெற்றி கொண்ட பகவான் ஸ்ரீ இராமர் அதன் பின்னர் அயோத்யாவிற்குத் திரும்பிய நாளை தீபாவளித் திருநாளாக வட இந்தியாவில் கொண்டாடுகின்றனர். மேலும், அனைத்து உலகையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது அன்னையான யசோதையினால் உரலில் கட்டப்பட்டதும் தீபாவளியன்று நடைபெற்ற நிகழ்ச்சியாகும்.

பாரத நாட்டின் சில பகுதிகளில் தீபாவளி துர்கா பூஜையாகவும், புது வருடப் பிறப்பாகவும் கொண்டாடப்படுகிறது. அத்தகு கொண்டாட்டத்திற்கும் வைஷ்ணவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

### அனுசரிக்கும் விதம்

சிறப்புமிக்க தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோர் இந்த லீலைகளை நினைவுகூர்ந்து தீபாவளியை அனுசரித்தல் மிகவும் அவசியம். தீபாவளியை அனுசரிப்பவர்களில் பெரும்பாலானோர், திரைப்படங்களுக்குச் செல்வதிலும், தொல்லை தரும் தொலைக்காட்சியைக் காண்பதிலும் இத்திருநாளைக் கழிப்பது துரதிர்ஷ்டமே. அசைவ உணவு ஒருபோதும் உண்ணத் தகுந்ததல்ல; அவ்வாறு இருக்கையில், மிகுந்த நன்நாளான தீபாவளியன்று அசைவம் சாப்பிடுதல் சரியானதா என்ன? அத்தகு செயல் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் சகஜமானதாக இருத்தல் வேதனைக்குரியதாகும்.

கிருஷ்ணரின் திருநாமங்களை உச்சரித்து, அவரது லீலைகளைக் கேட்டு, அற்புதமான உணவுப் பொருள்களை அவருக்குப் படைத்து, அதனைப் பிரசாதமாக உண்பதன் மூலம் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடலாம். *தீபா* என்றால் 'தீபம்' என்றும், *வளி* என்றால் 'அதிகமான' என்றும் பொருள்படும். எனவே, தீபாவளித் திருநாளன்று நிறைய தீபங்களை ஏற்றிக் கொண்டாடுதல் உசிதமானது. மக்கள் தன்னிடம் வருவதற்கு வசதி செய்வதற்காகவே பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இத்தகு திருவிழாக்களை நமக்கு அளித்துள்ளார். அவற்றை முறையாகப் பயன்படுத்திக் கொள்வது நமது பணி.

## நான் வாழும் வரை விட்டுக் கொடுக்க மாட்டேன்



(கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பது குறித்து ஸ்ரீல பிரபுபாதர் பேசுகையில்) இதை நான் சொல்லவில்லை; சாஸ்திரம் சொல்கிறது, பூர்வீக ஆச்சாரியர்கள் சொல்கிறார்கள். ஆனால் கிருஷ்ணரை மறைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிலர் பகவத் கீதையை பிரச்சாரம் செய்கிறார்கள். அத்தகு அரசியல்வாதிகளும் பண்டிதர்களும் அயோக்கியர்களே. அவர்களின் முக்கிய குறிக்கோள் கிருஷ்ணரை அழிக்க வேண்டும் என்பதே. எனக்கு மும்பையில் ஒரு மிகப்பெரிய நண்பர் இருந்தார். அவர் கீதையைப் பிரச்சாரம் செய்வதற்காக பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருந்தார். ஆனால் கிருஷ்ணரை ஒதுக்கிவிட்டு கீதை மட்டும் வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இராமர் இல்லாத சீதை வேண்டும் என்ற இராவணனின் கொள்கையே இது. கிருஷ்ணரை உதறிவிட்டு கீதையை எடுத்துச் செல்ல முயற்சிக்கின்றனர். ஆனால் என்னால் அவ்வாறு விட்டுக் கொடுக்க முடியாது. என் வாழ்நாள் ஏறக்குறைய முடிந்துவிட்டது. தற்போது எனக்கு வயது 81. ஆனால் நான் வாழும்வரை எதிலும் விட்டுக் கொடுக்க மாட்டேன். *க்ருஷ்ணஸ் து பகவான் ஸ்வயம்.* (கிருஷ்ணரே முழுமுதற் கடவுள்) இதுவே உண்மை. நான் ஏன் மக்களை தவறாக வழிநடத்த வேண்டும்? அவர்கள் கடவுளைத் தேடி வருகின்றனர்; கடவுள் யார்? கடவுள் எங்கே? என்று. இதோ இங்கிருக்கிறார், கடவுள், கிருஷ்ணர். அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். கடவுளுக்கான அனைத்து ஐஸ்வர்யங்களும் கிருஷ்ணரிடம் உள்ளன. அவரது செயல்களைப் பாருங்கள், உணர்வீர்கள்.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்,
ஆகஸ்ட் 24, 1976, ஹைதராபாத்; அறக்கட்டளை
ஆணையருடனான சந்திப்பின் போது

நவம்பர் 9, ஸ்ரீல பிரபுபாதர்
திரோபாவ திதி (மறைவு நாள்)

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த "பிரபுபாதர் நூற்றந்தாதி". எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

---

### பகுதி 3

**என்றுசெல்வோம் என்றுள்ளம் ஏங்கு மிடமான**
**கன்றுகள் மேய்ப்பான் களித்திருந்– தொன்றும்**
**விருந்தா வனம்வந்து வீடதுவாய்க் கொண்டார்**
**பொருந்து மிடமாகப் போற்றி. (25)**

என்று செல்வோம் என்று பக்தர்கள் ஏங்கும் இடமான, கன்றுகளை மேய்த்துக் கண்ணன் மகிழ்ச்சி பொங்க விலகாதிருக்கும் இடமான விருந்தாவனத்தை பிரபுபாதர் பொருந்தும் இடமாகப் போற்றி, வீடாகக் கொண்டார்.

**போற்றிப் புகுந்தார் இராதாதா மோதருடன்**
**வீற்றிருந்த கோயில் வளாகத்துள்– ஆற்றிடும்**
**தொண்டுகள் ஆங்கே தொடர்ந்தன ஆற்றிய**
**தொண்டர்தம் பாதங்கட் தொட்டு. (26)**

விருந்தாவனத்தில் இராதா தாமோதரர் கோயில் வளாகத்தில் தங்கினார். முந்தைய ஆச்சாரியர்களின் பாதங்களைப் போற்றி, அவர்கள் வழியிலே பிரபுபாதர், புத்தகங்கள் எழுதுதல், மொழிபெயர்த்தல் போன்ற பக்தித் தொண்டைத் தொடர்ந்தார்.

**தொட்டமைத்த பக்திவே தாந்தருரை பாகவதம்**
**திட்டமுடன் கற்கத் துணைநிற்கும்– தொட்டமுதற்**
**காண்டம் முடித்தார்மன், கட்டியநற் புத்தகமாய்த்**
**தூண்டிற்சம் சாரம் துறந்து. (27)**

இவ்வாறாக பிரபுபாதர் எழுதிய பாகவத உரையானது மக்கள் திட்டமுடன் பாகவதத்தைக் கற்கத் துணையாக நிற்கும். துறவி ஆகி, பாகவதத்தின் முதல் காண்டத்திற்கு ஆங்கில உரை முடித்து, அதைப் புத்தகமாக வெளியிட்டார்.

**துறந்த துறவியாய்த் தூதராய்மேல் நாட்டில்**
**அறம்பரப்ப ஆயத்த மானார்– சிறந்ததோர்**
**கப்பற் செலுத்தும் கடற்தொழிற் செய்தோரின்**
**ஒப்புதற் பெற்றார் உவந்து. (28)**

அதன்பிறகு, துறவியாக, பக்தியின் தூதுவராக பாகவத தருமத்தை மேல்நாடுகளில் பரப்பத் தயாரானார். அதற்காகக் கப்பல் செலுத்தும் தொழில் செய்பவரின் உதவியை நாடி, இலவசமாகக் கப்பல் பயணம் செய்ய அவரின் ஒப்புதலையும் பெற்றார்.

**உவந்து அபயர் உதவிகள் நாடத்**
**தவம்செய் சுமதிகைத் தந்தார்– தவத்திரு**
**ஆறுபத் தொன்பதென் றாகையிற் கப்பலில்**
**ஏறுபோல் நின்றார் எழுந்து. (29)**

பிரபுபாதர் அமெரிக்க நாட்டிற்குக் கடல்பயணம் செய்ய நாடும்பொழுது, மும்பையில் சிண்டியா கப்பல் நிறுவனத்தின் முதலாளியான திருமதி சுமதி மொரார்ஜி கைதந்து உதவினார்.



**செப்டம்பர் 17, 1959, சந்நியாசம் ஏற்ற நாள்.** இடமிருந்து வலம்: முனி மஹாராஜ், பக்தி பிரக்ஞ கேசவ மஹாராஜ், அ.ச. பக்திவேதாந்த சுவாமி மஹாராஜ்

அறுபத்து ஒன்பது ஆண்டுகள் நடக்கையில் தவத்திரு, கப்பலில் பயணிப்பதற்காகச் சிங்கம்போல் எழுந்து நின்றார்.

**எழுந்த பயணம் இடங்கள் பெயர்ந்து**
**விழும்பனி நாட்டிடை வைக்க– விழுந்த**
**அமெரிக்க நாட்டின் அடிபிடி வாழ்வைத்**
**தமர்கண்டு நொந்தார் தவித்து. (30)**

ஆரம்பித்த கப்பற் பயணமானது பல இடங்கள் மாறி, பனிவிழக்கூடிய நாடான அமெரிக்காவில் பிரபுபாதர் அவர்களை விட்டது. அமெரிக்க நாட்டின் மக்கள் வாழும் முறையைக் கண்ட பிரபுபாதர் தவித்து நொந்து போனார்.

**தவித்தவ ராண்டொன்று தாண்டிய பின்பு**
**தெவிட்டாத தன்னுணர்வு தந்து– தவித்த**
**இளைஞரைச் சேர்த்து இனியநற்சே வையாற்**
**களைபெற்று நின்றார் கலந்து. (31)**

பிரபுபாதர் அவர்கள் அமெரிக்காவில் வாழ்வின் நோக்கம் அறியாது தவித்த இளைஞர்களுக்குத் தான் யார் என்னும் உணர்வினைத் தந்து, அவர்களைக் கண்ணனின் தொண்டிலே ஈடுபடுத்தி, ஓராண்டு காலத்திற்குப் பிறகு மகிழ்வுடன் சாதனை புரிந்தவராக நின்றார்.

**கலந்து இளைஞரின் கைகள் இணைய**
**நலந்தர நாட்டினார் நன்கு– உலகிற்**
**கிருட்ண உணர்வுக் கினத்தை, உணர்ந்து**
**பொருட்படு சீர்கட் புணர்ந்து. (32)**

அத்தகைய இளைஞர்களின் உதவி கொண்டு உலக மக்களின் நலனுக்காகத் தகுந்த சொற்களின் சேர்க்கை கொண்டு, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் என்னும் அமைப்பை அமெரிக்க நகரான நியூயார்க்கில் கி.பி.1966இல் துவங்கினார்.

**புணர்ந்தமைத்த மாயன் புகழ்சொல் இனம்நம்**
**உணர்வினுக் குன்னத மூட்டும்– உணர்வீர்**
**நியூயார்க் நகரில் நிலைக்கும் அமைப்பை**
**வியூகமும் காணும் வியந்து. (33)**

அவ்வாறு அமைந்த, கண்ணனின் புகழ்பாடும் இயக்கமானது நமது உணர்வினுக்கு உன்னதத்தை ஊட்டும். நியூயார்க் நகரில் துவக்கப்பட்டு நிலைத்திருக்கும் இந்த அமைப்பை பாற்கடலில் உள்ள பக்தர்களும் கண்டு வியப்பர்.

**வியந்தனர் கீர்த்தனம் வீதிகளில் வென்று**
**அயரா தொலித்திட ஆங்கு– நயந்தவர்**
**பக்திவே தாந்தரின் பண்பட்ட சொற்களாற்**
**தக்கவழி தேர்ந்தார் தெளிந்து. (34)**

மேலை நாடுகளில் கண்ணன் நாம கீர்த்தனம் வென்று, வீதிகளில் அயராது ஒலித்திட அங்குள்ளவர்கள் வியந்தனர். அந்தக் கீர்த்தனத்தை விரும்பியர்கள், மேலும் பக்திவேதாந்தரின் பண்பட்ட சொற்களால், தகுந்த வாழ்வுக்கு வழி என்ன என்பதை அறிந்து தெளிவானார்கள்.



அமெரிக்க ஹிப்பிகளுக்கு மத்தியில் பிரபுபாதர் கீர்த்தனம் செய்த காட்சி

**தெளிந்தவர் கொள்கையிற் திண்ணியர் ஆகி**
**வளர்ந்துநல் வைணவர் ஆனார்– வளர்த்தவர்**
**பக்தியின் தூதுவர், பாடுவோம் பண்ணொடு**
**பக்திவே தாந்தரின் பண்பு. (35)**

அவ்வாறு தெளிந்தவர்கள் கொள்கையை உறுதியாகப் பின்பற்றி நல்ல வைணவர்கள் ஆனார்கள். அவ்வாறு அவர்களை வளர்த்தவர்பக்தியின்தூதுவரானபக்திவேதாந்தர். ஆகையினால் அவரின் சிறந்த பண்புகளை இசையோடு பாடுவோம்.

**பண்பிற் சிறந்து, பழம்பெரும் வைணவர்**
**பண்புகள் போற்றிப் படைத்தார்நூல்– ஒண்புகழ்**
**சைத்தன்யர் காட்டிய சாத்திரம் கொண்டுதன்**
**கைத்திறம் காட்டினார் காண். (36)**

பண்புகளில் சிறந்து, முந்தைய ஆச்சாரியர்களின் பண்புகள் போற்றி, அவர்கள் வழியைப் பின்பற்றி நூல்கள் படைத்தார். ஒப்பற்ற புகழையுடைய சைதன்ய மஹாபிரபு காட்டிய சாஸ்திரங்களின் உதவி கொண்டு, தன் கைத்திறத்தைப் பிரபுபாதர் எழுத்திலே காட்டினார். (தொடரும்)

தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.

# மனித வாழ்வின் நான்கு எதிரிகள்

*கை நிறைய சம்பளம், வங்கிக் கணக்கில் பல இலட்சங்கள், ஆடம்பரமான பங்களா, அழகிய மனைவி, அன்பான குழந்தைகள், விரைந்து செல்லும் கார்--இவையே மனித வாழ்வின் வெற்றி என்று பெரும்பாலானோர் நினைக்கின்றனர். ஆனால்...*

**வழங்கியவர்: பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி**

ஒருவன் தனது வாழ்வை தூய்மைப்படுத்திக் கொண்டால், அதுவே மனித வாழ்வின் உண்மையான வெற்றியாகும். சாஸ்திரங்களில் கொடுக்கப் பட்டுள்ள ஒழுங்கு முறைகளைப் பின்பற்று வதன் மூலம் மனிதர்கள் தங்களது வாழ்வில் வெற்றியை (பக்குவத்தை) அடைய முடியும் என்று பகவத் கீதையில் (16.23) பகவான் கிருஷ்ணர் கூறுகிறார்.

ய: ஷாஸ்த்ர-விதிம் உத்ஸ்ருஜ்ய
வர்ததே காம-காரத:
ந ஸ ஸித்திம் அவாப்னோதி
ந ஸுகம் ந பராம் கதிம்

“சாஸ்திர விதிகளைப் புறக்கணித்து தனது மனம்போன போக்கில் செயல்படு பவன், பக்குவத்தையோ சுகத்தையோ பரம இலக்கையோ அடைவதில்லை.”

பக்குவமற்ற புலன்கள், ஏமாற்றும் இயல்பு, தவறு செய்யும் தன்மை, மாயையின் வசப்படுதல் ஆகிய நான்கு முக்கிய குறைபாடுகள் சாதாரண உயிர் வாழிகளிடம் காணப்படுகின்றன. இக்குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டு விளங்கும் சாஸ்திர விதிகள், எல்லா சாதுக்களாலும் ஆச்சாரியர்களாலும் மஹாத்மாக்களாலும் எவ்வித மாற்றமு மின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவற்றின்படி, மனித வாழ்வு தவத்திற் கானதாகும். மனித வாழ்க்கை என்பது நாய்களுக்கும் பன்றிகளுக்கும்கூட கிடைக்கும் புலனின்பத்திற்கானது அல்ல என்று ஸ்ரீமத் பாகவதத்தில் (5.5.1) ரிஷபதேவர் கூறுகிறார். மனித வாழ்வில் தவத்தை மேற்கொள்பவர்கள் தூய்மையான தளத்திற்கு உயர்வு பெற்று உன்னத ஆனந்தத்தை அடைய இயலும்.

## தவம்

தவம் மேற்கொள்ள வேண்டும் என்றால், காட்டிற்குச் சென்று தனிமையில் கடுமையான தவத்தில் ஈடுபட வேண்டும் என்பது பொருளல்ல. தவம் என்றால் வாழ்வின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக சிரமங்களைத் தன்னிச்சையாக ஏற்றுக் கொள்வதாகும். நோய்வாய்பட்டவர் மருத்துவரின் பரிந்துரைப்படி உணவை ஏற்க வேண்டும். அதனை விடுத்து தான் விரும்பியவாறு எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்று அந்த நோயாளி கருதினால், அவனது நோய் குணமடையாது. அதுபோல மனம்போன போக்கில் எதை வேண்டுமானாலும் செய்து கொண்டு ஆன்மீகத்திலும் ஈடுபடலாம் என்றால், நம்மால் வாழ்வின் உன்னத இலக்கை அடைய முடியாது.

தவறான/முறையற்ற உடலுறவு, போதைப் பழக்கங்கள், அசைவ உணவு உண்ணுதல், சூதாடுதல் ஆகிய நான்கும் மனித வாழ்வின் நான்கு எதிரிகள் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இந்நான்கு செயல்கள் எங்கெல்லாம் செய்யப்படுகின்றனவோ, அங்கு பாவ புருஷனான கலி குடியிருக்கின்றான் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் (1.17.38) கூறப்பட்டுள்ளது. துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்னும் பழமொழிக்கேற்ப துஷ்டமாக விளங்கும் இந்நான்கு தீய செயல்களையும் முற்றிலும் தவிர்க்க வேண்டுமென அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு வருபவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். இத்தீய பழக்கங்களுக்குஅடிமையானவர்களுக்கு ஆரம்பகாலத்தில் இவ்வறிவுரைகளைப் பின்பற்றுவது கடினமாக இருக்கலாம். அக்கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு ஒருவன் அவ்வறிவுரைகளைப் பின்பற்றினால் அதுவே தவம் எனப்படுகிறது. மனம்போன போக்கில் செய்யலாம் என்று எண்ணாமல் சாஸ்திரங்களின் கட்டளைகளை உயர்ந்த அதிகாரிகளிடமிருந்து பின்பற்றியே ஆக வேண்டும்.

தற்காலத்தில் மக்கள் எத்தகைய தவங்களையும் கட்டுப்பாடுகளையும் பின்பற்றாமல், கடினமாக உழைத்து புலனின்பத்தை அனுபவிப்பதிலேயே தங்களது முழு வாழ்வையும் கழிக் கின்றனர். தற்போதுள்ள எந்தவொரு பள்ளியிலோ கல்லூரியிலோ தவத்தை பற்றிக் கற்பிக்கப்படுவதில்லை. பெரியோர்களின் முன்பு தவறான காரியங்களைச் செய்தாலும் அவை குற்றமெனக் கருதப்படுவதில்லை. இவை மனித குலத்திற்கான நாகரிகமன்று; மாறாக மிருகங்களின் நாகரிகமே. ஏனெனில், மிருக வாழ்க்கையில் விரும்பியவற்றைச் செய்யலாம். மனித வாழ்க்கை அ,ஆ,இ,ஈ படிப்பதில் ஆரம்பமாவது அல்ல. ஒருவர் படித்துப் பட்டங்களை பெற்றவராக இருப்பினும் மிருகத்தினும் கீழான குணங்களுடனிருந்தால், அதில் ஒரு பயனும் இல்லை. இந்த நான்கு பாவ காரியங்களும் தர்மத்தின் நான்கு தூண்களான வாய்மை, தூய்மை, தவம், தயை ஆகியவற்றை நேரடியாகச் சிதைத்தழிப்பவை. இதனைப் பற்றி விரிவாகக் காணலாம்.

## சூதாட்டம்

சூதாட்டம் தர்மத்தின் முதல் தூணாகக் கருதப்படும் வாய்மையை

முற்றிலும் அழித்து விடுகிறது. சூதாட்டம் என்பது பணத்தை பந்தயம் கட்டி ஆடுவது மட்டுமல்ல, தவறான வழியில் பங்கு வியாபாரத்தில் ஈடுபடுதல், லாட்டரி விற்பனை, தொலைக்காட்சி பார்த்தல், திரைப்படத்திற்குச் செல்வது, விளையாட்டுகள் பார்ப்பது, ஜட இசை கேட்பது, சீட்டாட்டங்கள், குறுக்கெழுத்து போட்டிகள் போன்ற செயல்கள் அனைத்தும் சூதாட்ட பிரிவில் அடங்கும். சூதாட்டம் ஒருவரை எப்போதும் ஏக்கத்தில் ஆழ்த்துகிறது. பேராசை, பொறாமை, கோபம், வெறுப்பு போன்ற உணர்வுகளை மேலும் தீவிரமாக்குகிறது. இவ்வாறு சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் தங்களது வாழ்வையே பணயம் வைத்து இழக்கின்றனர்.

ஒரு சூதாடி அதிர்ஷ்டவசத்தால், அதிகமான பணத்தை வென்று புலனின்பத்தை அனுபவிக்கலாம் என்று நினைக்கிறான். சூதாட்டத்தில் சொல்லப்படும் அதிர்ஷ்டம், தற்செயல் போன்ற சொற்கள் இறைவனின் அதிகாரத்தையும் கர்ம விதிகளையும் நிராகரிக்கின்றன. ஸ்ரீல பிரபுபாதர் மனக்கற்பனைகளான சினிமா, விளையாட்டு போன்றவற்றையும் சூதாட்டப் பிரிவிலேயே சேர்த்தார்; ஏனெனில், வேதக் கொள்கைகளின் இறுதி இலக்கைவிட்டு விலக்கிச் செல்லும் மனக் கற்பனைகள் அனைத்தும் சூதாட்டப் பிரிவினையே சாரும். சாஸ்திரங்களிலும் சூதாட்டத்தினால் அனைத்தையும் இழந்தவர்களின் வரலாற்றை ஏராள மாகக் காணலாம். பாண்டவர்கள் எல்லா வற்றையும் சூதாட்டத்தில் பணயம் வைத்து இழந்தனர். அதுவே மஹாபாரத யுத்தத்திற்கு அவர்களைக் கொண்டு சென்றது என்பதை நாமறிவோம். நளதமயந்தி கதையிலும் நளனுக்கு இருந்த சூதாடும் பழக்கத்தினால் முழு இராஜ்ஜியத்தையும் இழந்து காட்டிற்குச் சென்று துன்பப்பட்டான் என்பதை அறியலாம்.

மானுட பிறவியை பெற்ற நாம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரது சேவையில் நம்மை பணயம் வைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே நாம் மகிழ்வுருவோம். அவரது இராஜாங்கத்தை சென்றடைவோம். அவ்வாறு அல்லாமல் நமது வாழ்நாளைப் புலனின்பத்திற்காக பணயம் வைத்தால் கர்ம விளைவுகளால் பாதிப்படைந்து கீழ்நிலை விலங்குகளின் உடலிற்கு தாழ்த்தப்படுவோம்.

## முறையற்ற (அ) தவறான உடலுறவு

இந்த பாவகாரியமானது தர்மத்தின் நான்கு தூண்களில் ஒன்றான தூய்மையை அழிக்கவல்லது. உடலின்



மது அருந்துதல், சூதாடுதல், தவறான பாலுறவில் ஈடுபடுதல், மாமிசம் உண்ணுதல் ஆகிய பாவக் காரியங்களில் ஈடுபடுவோர் நரகத்தில் அதற்குத் தகுந்த தண்டனைகளை அனுபவிக்க வேண்டும் என்பதைச் சித்தரிக்கும் வரைபடம்.

தேவைகளில் பாலுறவும் ஒன்று என்பதால் அது சாஸ்திரங்களில் ஓரளவிற்கு அனுமதிக்கப்படுகிறது. ஆனால் கட்டுப்பாடற்ற உடலுறவையோ, இதர புலனுகர்வையோ அனுமதிப்பதில்லை. எனவே பண்பாடுடைய எல்லா மனித சமூகத்திலும் அறவாழ்வின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு திருமணம் செய்விக்கப்படுகிறது; ஏனெனில், இதுவே காம உணர்வை நெறிப்படுத்துவதற்கான சிறந்த வழியாகும். கட்டுப்படுத்தப்பட்ட பற்றற்ற உடலுறவும் ஒருவித தபஸ்யமே ஆகும். பகவத் கீதையில் (7.11) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தர்மாவிருத்தோ பூதேஷு காமோ (அ)ஸ்மி, "தர்மத்தின் கொள்கைகளுக்கு விரோதமில்லாத காமம் நானே," என்று கூறுகிறார்.

ஒருவன் தனது மனைவியின் மூலம், குழந்தைகளைப் பெற்று கொள்வதற்காக மட்டுமே காம வாழ்வில் ஈடுபட வேண்டும். குழந்தைகள் தேவையில்லையெனில் அவன் காம வாழ்வை அனுபவிக்கக் கூடாது. கருத்தடை, மற்றும் இதர கொடூர முறைகளின் மூலம் குழந்தைப் பிறப்பைத் தடுத்து நவீன சமுதாயம் காம வாழ்வினை அனுபவிக்கின்றது. இஃது அசுரத்தனமானது என பகவத் கீதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முறையற்ற ஆண்-பெண் உறவு, கருக்கலைப்பு, கருத்தடுப்பு, குழந்தை பிறக்காமல் இருக்கச் செய்யும் அறுவைச் சிகிச்சை, செயற்கை சிற்றின்பப் பழக்கம் ஆகியவை அனைத்தும் மஹா பாவகரமானவை. பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதற்கான நோக்கமின்றி ஒருவர் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது. ஒருவனால் கிருஷ்ண உணர்வில் குழந்தைகளை வளர்க்க முடியுமென்றால் நூற்றுக்கணக்கான குழந்தைகளைப் பெறலாம்.

சைதன்ய மஹாபிரபு தன்னைக் காண வந்த சிவானந்த சேனரிடம் அவருக்குப் பிறக்கபோகும் பிள்ளைக்கு பரமானந்த தாஸன் என்று பெயர் சூட்டுமாறு அறிவுறுத்தினார். சிவானந்த சேனர் தர்மத்திற்கு விரோதமாக செயல்படாத காரணத்தினால், மஹாபிரபு அவரை நிராகரிக்கவில்லை. மாறாக, தனது நெருங்கிய சகாக்களில் ஒருவரான சோட்டா ஹரிதாஸ் என்பவரை, ஓர் இளம் பெண்ணை காம உணர்வுடன் வெறுமனே பார்த்த காரணத்தினால், தமது குழுவிலிருந்து விலக்கிவிட்டார். இதன் மூலம், தர்மத்தின் கொள்கைகளுக்கு புறம்பான தகாத உடலுறவிற்கான எண்ணம், விருப்பம் மற்றும் அதை அனுபவிப்பதற்கான திட்டத்தைத் தீட்டுதல் ஆகிய அனைத்தும் பாவகரமான செயல் என்பதை மஹாபிரபு நமக்கு கற்பிக்கிறார்.

முறையற்ற பாலுறவில் ஈடுபடுவோர் வஜ்ரகந்தக ஸால்மலி என்ற கொடிய நரகத்தைச் சென்றடைவர் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.


## போதை வஸ்துக்கள்

போதை வஸ்துக்கள் என்பது உடல் பராமரிப்பிற்கு அப்பாற்பட்ட தேவையில்லாத இரசாயனப் பொருட்களை உட்கொண்டு மனம் மற்றும் உடலில் ஒருவித உந்துதலையும் மயக்கத்தையும் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்ள முயற்சிப்பதைக் குறிக்கிறது. மக்கள் தங்களது வலியையும் கஷ்டத்தையும் மறப்பதற்காக போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றனர். ஆகையால் அவர்கள் அழிவுப் பாதையை நோக்கிச் செல்கின்றனர். இன்பத்தை நாடி போதை வஸ்துக்களிடம் தஞ்சம் புகுவோர், இறைவனால் அளிக்கப்பட்ட இந்த மனித உடலையும் மனதையும் சுய நலத்திற்காக அனுபவிக்க நினைக்கும் இந்த வழிமுறையால் மாயையை அதிகரிக்கச் செய்து கொள்கின்றனர்.

போதை வஸ்துக்களின் பிரிவில் காபி, தேநீர் (டீ), புகையிலை, கஞ்சா, மது, எல்.எஸ்.டி, கஃபைன் அடங்கிய குளிர்பானங்கள், மாரிஜுனா, அபின் ஆகியவை அடங்கும். சாக்லேட்டிலும் மயக்கமளிக்கக் கூடிய கலவைகள் கலந்திருப்பதால் அவையும் இப்பிரிவில் அடங்கும். இப்பழக்க வழக்கங்களினால் ஒருவர் உடல் நலம் பாதிப்படைந்து நாளடைவில் தீராத வியாதியைச் சந்திப்பர். இத்தகையவர்களை வயோதிகம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே வந்தடையும். மேலும் இப்பழக்கத்தில் உள்ளவர்களின் மனம் எப்போதும் குழம்பியிருக்கும். அவர்களால் எந்தவொரு செயலிலும் விவேகத்துடன் ஈடுபட முடியாது. இவ்வாறாக போதை அளிக்கக்கூடிய பொருட்களை உட்கொள்வதால் ஒருவன் தனது ஜடப்பற்றை அதிகரிக்கச் செய்வதோடு மட்டுமல்லாமல், மனதை இறைவனிடம் ஒருமுகப்படுத்துவதையும் இழக்கிறான். மனித வாழ்வு இறையுணர்வைப் புதுப்பிப்பதற்காகவேயன்றி குடிபோதையில் மறப்பதற்காக அல்ல.

"குடி குடியைக் கெடுக்கும்", "மது அருந்துதல் வீட்டிற்கும் நாட்டிற்கும்

**ஸ்ரீல பிரபுபாதர் 1965இல் அமெரிக்கா சென்றபோது, அங்கிருந்த ஹிப்பிகள் அனைத்து தீய பழக்கங்களுக்கும் அடிமையாகியிருந்தனர். தீய பழக்கங்களை விட்டுவிடும்படி அவர் முதலில் கட்டளையிடவில்லை. மாறாக ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை வழங்கி, கிருஷ்ண பிரசாதத்தை அவர்களுக்கு அளித்தார். அவர்கள் வெகுவிரைவில் கிருஷ்ண கீர்த்தனத்தினால் தங்களது உண்மை நிலையை உணர்ந்து, தீயப் பழக்கங்களை முற்றிலும் விட்டொழித்து, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தொண்டர்களாகினர்.**



மாபெரும் பாவிகளான ஜகாய், மதாய் ஆகிய இருவரும் பகவான் சைதன்யரிடம் சரணடைதல்

கேடு'', ''புகை நமக்குப் பகை'' என்று எச்சரிக்கப்படலாம்; ஆனால் போதைக்கு அடிமையானவர் எவராலும் அவற்றை விட்டொழிக்க முடியாது. ஏனெனில் ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது. ஒருவர் உயர்ந்த சுவையைப் பெறாதவரை, எவ்வளவு தான் அறிவுரைகளைக் கேட்டாலும் தாழ்ந்தவற்றிலேயே லயித்திருப்பர். அந்த அதி உயர்ந்த சுவையை அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதர் அனைவருக்கும் அளித்தார். அவர் 1965இல் அமெரிக்கா சென்றபோது அங்குள்ள ஹிப்பிகள் போதை வஸ்துக்களுக்கு முற்றிலும் அடிமையாயிருந்தனர். ஸ்ரீல பிரபுபாதர் அவர்களை போதை பொருட்களை விட்டுவிடுங்கள் என்று முதலில் கட்டளை யிடவில்லை. மாறாக ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை வழங்கி, கிருஷ்ண பிரசாதத்தை அவர்களுக்கு அளித்தார். அதனால் அவர்கள் வெகுவிரைவில் கிருஷ்ண கீர்த்தனத்தினால் தங்களது உண்மை நிலையை உணர்ந்து, போதைப் பழக்கங்களை முற்றிலும் விட்டொழித்து, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தொண்டர் களாயினர்.

மாபெரும் குடிகாரர் களான ஜகாய், மதாய் ஆகிய இருவரும் நித்யானந்த பிரபுவின் கருணையினால் பக்தர்களாக மாறியதை நாம் காணலாம். இதிலிருந்து நாம் அறியவேண்டியது என்னவெனில், தூய பக்தர்களின் கருணைக்கு பாத்திரமாகி, பக்தித் தொண்டில் தன்னிச்சையாக சேவை செய்ய முன்வந் தால், எளிமையாக தீய பழக் கங்களை விட்டொழிக்க முடியும்.

## மாமிசம் உண்ணுதல்

மாமிசம் எங்கெல்லாம் உண்ணப்படுகிறதோ, அங்கு தர்மத்தின்நான்குதூண்களில் ஒன்றான கருணை (தயை) மனப் பான்மை அடியோடு அழிக்கப் படுகிறது. நாவின் ருசிக்காக உணவு சமைத்து உண்பவர்கள் பாவத்தையே உண்கிறார்கள் என்று பகவத் கீதையில் (3.13) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். பாவியாக இருக்கும் வரை ஒருவனால் மகிழ்ச்சியடைய முடியாது. மிருகங்கள் தன் இயற்கையின் நியதியை மீறுவதில்லை. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. பசு புல்லைத் தின்று நமக்கு பாலை அளிக்கிறது. ஆனால் மனிதனோ பாலைக் குடித்துவிட்டு பசுவையும் கொன்று தின்பான். இதனால் அவன் தாவரங்களை உண்பதால் ஏற்படும் பாவத்தைவிட பல நூறு மடங்கு அதிகமான பாவத்தை சேர்த்துக் கொள்கிறான்.

உண்மையான அஹிம்சை என்பது எந்தவொரு உயிர்வாழியின் வாழ்க்கை பரிணாமத்தையும் தடுக் காமல் இருப்பதேயாகும். ஒரு குறிப்பிட்ட மிருகம் கொல்லப்படும்போது, அதன் முன்னேற்றம் தடுக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட உடலிலுள்ள மிருகம் இத்தனை நாள்கள் இத்தனை வருடங்கள் அவ்வுடலில் தங்கியிருக்க வேண்டுமெனில், நேரம் வருவதற்கு முன் கொல்லப்பட்டால், அந்த மிருகம் மற்றொரு இனத்திற்கு மாற்றம் பெறுவதற்குப் பதிலாக தன்னுடைய எஞ்சிய நாள்களை பூர்த்தி செய்வதற்காக அதே இனத்திற்கு மீண்டும் திரும்பி வர வேண்டும்.

நாவின் உந்துதலைக் கட்டுபடுத்த முடியாதவர்கள் விலங்குகளைக்கொன்று தின்கின்றனர். அத்தகையவர்கள் கும்பீபாகம் என்னும் நரகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு கொதிக்கும் எண்ணெயில் போடப்படுகின்றனர் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் (5.26.13) குறிப்பிடப்பட்டுள்ளது. மிருகவதையை அனுமதிப்பவர், கொல்பவர், கூறுபோடுபவர், வாங்குபவர், விற்பவர், சமைப்பவர், பரிமாறுபவர், உண்பவர் ஆகிய அனைவரும் அந்த மிருகத்தைக் கொன்றவர்களாகவே கருதப்படுகிறார்கள் என்று மனுசம்ஹிதையில் (5.51) குறிப்பிடப்பட்டுள்ளது.

அசைவ உணவு உண்பதை எந்தவொரு அதிகாரப்பூர்வமான மதங் களும் அனுமதிப்பதில்லை. உதாரண மாக, கிருஸ்துவ மதபோதனைகளில், ''உனது கரங்களில் இரத்தம் படிந்ததால் உனது பிரார்த்தனைகளை நான் ஏற்பதில்லை'' (இசயா 1.15), ''கொல்லாதிருப்பாயாக'' (பத்துக் கட்டளைகள்), ''உன்னுடைய உணவாக பழங்களாகட்டும், மருந்தாக இலைகளாகட்டும்'' (ஏலாஹில் 47.12), ''எருதைக் கொல்வது மனிதனைக் கொல்வதற்கு சமம்'' (இசயா 66.3) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குரானிலும் இதற்கு சான்றாக, ''இந்த பூமியில் உள்ள மிருகங்களும், இரண்டுஇறக்கைகளுடன் வானில் பறக்கும் பறவைகளும் உனக்கு மற்ற மக்களைப் போன்றவர்களே'' (சுறா 6, பதம் 38), என்றும், ''கடவுள் உனக்காக பயிர்களை விளையச் செய்து ஆலிவ் மற்றும் பேரிச்சம் பழம் மற்றும் திராட்சைப் பழங்களை உண்டாக்கினார்'' (சுரா 16, பதம் 11) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாமிசம்

**நாம் உண்ணும் உணவு ஆயுளை நீட்டித்து மனதை தூய்மைபடுத்தி உடலை பலப்படுத்துவதாக இருக்க வேண்டும். பால் பொருட்கள், சர்க்கரை, அரிசி, கோதுமை, பழங்கள், காய்கறிகள் போன்றவை ஸத்வ குணத்தைச் சார்ந்தவை. இவை இயற்கையிலேயே மிகவும் தூய்மையானதோடு மட்டுமின்றி அப்பாவி மிருகங்களை கொல்வதற்கான தேவை ஏதுமின்றி கிடைக்கின்றன.**

உண்பதை புத்தமதம் மற்றும் சமண மதமும் அவ்வாறே அனுமதிப்பதில்லை.

அசைவ உணவு உண்ணும் விலங்குகளுக்கு இரையை கிழித்து உண்ணத் தேவையான கூரிய நகங்கள், கோரைப் பற்கள், மாமிசத்தை எளிதில் ஜீரணிக்கக்கூடிய அமில சக்தி அதிகம் உள்ள உமிழ்நீர் சுரப்பி, சிறிய குடலமைப்பு ஆகியவை இயற்கையாகவே அமைந்துள்ளது. மனிதனின் உடலமைப்பு அசைவ உணவை உண்பதற்கும் ஜீரணிப்பதற்கும், தேவையற்றவையை வெளியேற்றுவதற்கும் பொருத்தமில்லாமல் அமைந்திருக்கின்றது. அசைவ உணவு சுவையும் சக்தியும் வாய்ந்தது என்று சிலர் நம்புகின்றனர். உண்மையில் மாமிசத்தை யாரும் அப்படியே உண்ண முடியாது. அதனோடு சேர்க்கப்படும் பொருள்களே அதற்கு சுவையையும் மணத்தையும் தருகின்றன. முட்டை ஒரு சைவ உணவு என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் முட்டைகளை உண்பது கருக் கொலைக்குச் சமம். முட்டைகளில் உள்ள பொருள் மாதவிடாய்க்குச் சமமானது என்று விஞ்ஞானம் கூறுகிறது. மாமிசம், மீன், முட்டை மட்டுமல்ல வெங்காயம், பூண்டு ஆகியவற்றையும் ஒருவர் உணவில் சேர்க்கக் கூடாது. ஏனெனில், இத்தகைய உணவுகள் ரஜோ, தமோ குணத்தில் இருப்பவை. அவை துன்பத்தையும் நோயையும் உண்டாக்குபவை. அது மட்டுமல்லாது தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் ரொட்டி (பிரட்), பிஸ்கட்டுகள் மற்றும் பக்தரல்லாதோர் தயாரித்த அனைத்து உணவு வகைகளும் கர்ம விளைவுகளை உண்டாக்குபவை என்பதால் அவற்றையும் ஒருவர் உண்ணக் கூடாது. பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரசாதத்தினை மட்டுமே உண்ண வேண்டும்.

நாம் உண்ணும் உணவு ஆயுளை நீட்டித்து மனதை தூய்மைபடுத்தி உடலை பலப்படுத்துவதாக இருக்க வேண்டும். பால் பொருட்கள், சர்க்கரை, அரிசி, கோதுமை, பழங்கள், காய்கறிகள் போன்றவை ஸத்வ குணத்தைச் சார்ந்தவை. இவை இயற்கையிலேயே மிகவும் தூய்மையானதோடு மட்டுமின்றி அப்பாவி மிருகங்களைக் கொல்வதற்கான தேவை ஏதுமின்றி கிடைக்கின்றன. பகவத் கீதையில் (9.26) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்,

பத்ரம் புஷ்பம் பலம் தோயம்
யோ மே பக்த்யா ப்ரயச்சதி
ததஹம் பக்த்யுபஹ்ருதம்
அஷ்நாமி ப்ரயதாத்மன:

இலை, பழம், பூ, நீர் ஆகியவற்றை அன்புடனும் பக்தியுடனும் கொடுக்கப்படும் போது தாம் அவற்றை ஏற்றுக் கொள்வதாக கூறுகிறார். எனவே மாமிசம், மீன், முட்டை போன்றவற்றை கிருஷ்ணர் ஏற்கமாட்டார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒருவர் பரமபுருஷ பகவானுக்கு நைவேத்யம் செய்த பிரசாதத்தை மட்டுமே உட்கொள்வதில் நாவினைப் பயிற்சி செய்தால் வெகுவிரைவில் அசைவ உணவு மட்டுமல்ல, எல்லா வேண்டாத விஷயங்களிலிருந்தும் படிப்படியாக விலகித் தூய்மையடைவர் என்பது உறுதி. ஒருவன் பாவகாரியங்களில் ஈடுப்பட்டிருக்கும் வரை இறைவனை அணுக முடியாது. பகவத் கீதையில் (7.28) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், யாரது பாவ விளைவுகள் முழுமையாக ஒழிக்கப்பட்டுள்ளதோ அவர்களே பக்தி தொண்டில் உறுதியுடன் ஈடுபட முடியும் என்று கூறுகிறார். ஆகவே இந்த மனித வாழ்வின் நான்கு எதிரிகளை விட்டொழித்தல், மனிதனாக வாழ விரும்பும் அனைவருக்கும் அவசியம்.

## விடுபடுவதற்கான வழி

இக்கட்டுரையை எழுதும் சேவையை கொடுக்கப்பட்ட நான் இஸ்கான் பக்தர்களின் சங்கம் கிடைப்பதற்கு முன்னர், மாமிசம் உண்ணுதல், டீ, காபி குடித்தல், டிவி பார்த்தல் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தேன். ஸ்ரீல பிரபுபாதரின் கருணையை பக்தர்களின் மூலம் பெற்ற நானும் எனது குடும்பத்தவரும் பாவ காரியங்களை விட்டொழித்து கிருஷ்ண பக்தியை தற்போது மகிழ்ச்சியுடன் பயிற்சி செய்து வருகிறோம். ஒருவர் கிருஷ்ண பக்தியை முறையாக பயிற்சி செய்யத் தொடங்கினால், பாவச் செயல்களை விட்டொழித்தல் என்பது கடினமாக இருக்காது. பாவ காரியங்களை விட்டொழித்து மனித வாழ்வைத் தூய்மைப்படுத்தி இறைவனை அடைய விரும்புவோர், தூய பக்தர்களின் சங்கத்தில் அவர்களது அறிவுரையைப் பின்பற்றி நடக்க வேண்டும். அதன் மூலம் மனித வாழ்வின் எதிரிகளை எளிமையாக வெற்றி காணலாம்.

*பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி M.Sc., M.Phil., அவர்கள், சென்னையில் தனது குடும்பத்தினருடன் இணைந்து கிருஷ்ண பக்தியை பயிற்சி செய்து வருகிறார்.*

# புகைப்படச் செய்திகள்




**அக்டோபர் 2, சென்னை:** (இடது) உலக திருநாமத் திருவிழாவை முன்னிட்டு தியாகராய நகரில் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஸ்ரீ ஸ்ரீ கௌர நித்தாய் பவனி வந்த காட்சி. (வலது) அச்சமயத்தில் நடைபெற்ற ஹரிநாம சங்கீர்த்தனம்.




**அக்டோபர் 10, பெரம்பூர், சென்னை:** (இடது) "கீதை காட்டும் பாதை" சிறப்பு நிகழ்ச்சியின் ஹரிநாம சங்கீர்த்தனம். (வலது) நிகழ்ச்சியில் கலந்து கொண்டோருக்கு தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி உபன்யாசம் வழங்கிய காட்சி




**நாகர்கோவில்:** புரட்டாசி சனிக்கிழமைகளில் நாகர்கோவில் மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படங்கள். (**நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்கள்:** தோவாளை, இரணியல், கோட்டார், குளச்சல்)





**அக்டோபர் 14-18, சென்னை:** (இடது) தவத்திரு ஜெயபதாக ஸ்வாமியினை வரவேற்க கோவிலில் கூடியிருந்த பக்தர்கள். உள்படம்: இஸ்கான் கோவிலில் தவத்திரு ஜெயபதாக ஸ்வாமி (வலது) அச்சமயத்தில் நடைபெற்ற தீட்சை நிகழ்ச்சி





**அக்டோபர் 15-17, சேலம்:** (இடது) தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி தலைமையிலான ஸ்ரவண கீர்த்தன முகாமில் நடைபெற்ற கீர்த்தனம். (வலது) "ஹரே கிருஷ்ண சவால்" என்ற சிறப்பு பொது நிகழ்ச்சியின் போது நடைபெற்ற நகர சங்கீர்த்தனம்.



**அக்டோபர் 18, நாமக்கல்:** "ஹரே கிருஷ்ண சவால்" சிறப்பு நிகழ்ச்சியில் தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி உரையாற்றுதல்



**அக்டோபர் 11, ஆவடி, சென்னை:** "கீதை காட்டும் பாதை" சிறப்பு நிகழ்ச்சியின் போது அரங்கேற்றப்பட்ட "யார் முட்டாள்?" நாடகம். **உள்படம்:** நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக தமிழில் சொற்பொழிவு வழங்கிய ஐரோப்பாவின் ஸ்லோவீனியா நாட்டைச் சார்ந்த திரு.வாசுதேவ தத்த தாஸ்.

# அறிவு தோன்றிய நாள் எது?

(இலண்டனில் 1973ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் ஒரு காலை நடைப்பயிற்சியின்போது தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும், பிரிட்டிஷ் மாணவர் ஒருவருக்குமிடையே நிகழ்ந்த உரையாடல்)

**ஸ்ரீல பிரபுபாதர்:** கிருஷ்ண உணர்வின் செய்தி ஆன்மீக உலகிலிருந்து வருகிறது. அஃது இந்த ஜடவுலகைச் சார்ந்தது அல்ல. அதனால் சில சமயம் இதனை மனிதர்கள் தவறுதலாக புரிந்துகொள்ளக் கூடும். எனவே, நாம் அவர்களுக்கு இதனைத் தெளிவாக விளக்க வேண்டும். ஆத்மா என்றால் என்ன என்பதைக்கூட அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. பெரிய பெரிய விஞ்ஞானிகளும் பெரிய பெரிய தத்துவவாதிகளும்கூட ஆத்மாவைப் பற்றியும் ஆன்மீக உலகைப் பற்றியும் அறியாமல் இருக்கின்றனர். அதனால் சில நேரங்களில் அவர்கள் இதனைப் புரிந்துகொள்வதை மிகவும் கடினமாக உணர்கின்றனர்.

**மாணவன்:** வேதங்கள் தோன்றிய நாளை அறிய நான் சமீபத்தில் ஆராய்ச்சி செய்து வந்தேன். சில தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஹராப்பா, மொகஞ்சதாரா காலத்து சாட்சியங்களின்படி, வேதங்கள் முன்பு நினைத்ததை விட வெகுகாலத்திற்குப் பின்னரே தோன்றியதாகத் தெரிவிக்கின்றனர். இக்கூற்றானது வேதங்களின் அதிகாரத் தன்மையைக் குறைப்பதாக உள்ளது; ஏனெனில், உலகின் பழமை வாய்ந்த மத நூல்கள் என்னும் நிலையை இக்கூற்றின் மூலம் அவை இழந்துவிடுகின்றன.


**ஸ்ரீல பிரபுபாதர்:** வேதம் என்றால் மத நூல் என்று பொருளல்ல. வேதம் என்றால் "அறிவு" என்று பொருள். எனவே, அறிவின் வரலாற்றினை உங்களால் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க முடிந்தால், வேதங்களின் ஆரம்ப காலத்தை உங்களால் அறிந்துகொள்ள முடியும். அறிவு என்று தொடங்கியது என்பதை உங்களால் ஆராய முடியுமா? உங்களால் அதனைக் கண்டுபிடிக்க இயலுமா?

**மாணவன்:** நம்மால் இயலும் என்று எனக்குத் தோன்றவில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியானால் வேதங்களின் வரலாற்றை உங்களால் எப்படி அறிய முடியும்? வேதம் என்பது அறிவாகும். எனவே, அறிவு தோன்றிய நாள் எது என்பதை நீங்கள் கண்டு பிடித்தீர்களானால் வேதங்களின் காலத்தை அறிய முடியும்.

வேதங்களின் வரலாறு இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்து தொடங்குகின்றது. உலகம் என்று துவங்கியது என்பதை யாராலும் கூற இயலாது. பிரம்மாவின் பிறப்புடன் படைப்பு தொடங்குகிறது, ஆனால் பிரம்மாவின் ஒரு நாளின் அளவைக்கூட உங்களால் கணக்கிட முடியாது. பிரம்மாவின் இரவில் இப்பிரபஞ்சம் ஓரளவிற்கு அழிக்கப்படுகிறது. பின்னர் அவரது பகலில் மறுபடியும் அது படைக்கப்படுகிறது. அழிவு (பிரளயம்) என்பது இரு வகைப்படும்; ஒன்று, பிரம்மாவின் இரவில் ஏற்படுகிறது; மற்றொன்று மொத்த பிரபஞ்சத்தையும் அழிக்கும் இறுதி பிரளயம். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், வேதத்தின் நாளைப் பற்றி இந்த சின்னஞ்சிறு மனிதர்கள் கற்பனை செய்கின்றனர். இது எள்ளி நகையாட வேண்டியதாகும்.

மாலை நேரத்தில் தோன்றி காலைப் பொழுதின் ஆரம்பத்திலேயே மடிந்து விடக்கூடிய பல்வேறு நுண்கிருமிகள் உள்ளன. ஓர் இரவு மட்டுமே அவற்றின் வாழ்நாளாகும். நமது வாழ்வும் அவ்வாறே. அப்படியிருக்க உங்களால் எந்த வரலாற்றை எழுத முடியும்? எனவே, நாங்கள் வேத அறிவை வேத அதிகாரிகளிடமிருந்து பெறுகின்றோம்.





கிணற்றிலுள்ள தவளை தனது சொந்த கிணற்றிற்கு அப்பாலுள்ள உண்மையை ஏற்க மறுப்பதுபோல, இன்றைய அறிஞர்கள் தங்களது சொந்த முயற்சிக்கு அப்பாலுள்ள வேதங்களை ஏற்க மறுக்கின்றனர்.



ஒருவன் தவளையைப் போன்ற தத்துவவாதியாக இருக்கக் கூடாது. தவளையின் தத்துவம் உங்களுக்குத் தெரியுமா? அட்லாண்டிக் சமுத்திரத்தை ஒருபோதும் கண்டிராத டாக்டர் தவளை ஒன்றிடம் ஒருவர், "அது மிகப்பெரிய நீர்ப்பரப்பு" என்று கூறினார்.

டாக்டர் தவளையோ, "ஓ, அஃது இக்கிணற்றைவிடப் பெரியதா?" என்று கேட்டதாம்.

**மாணவன்:** ஆம். அட்லாண்டிக்சமுத்திரம் அதன் அறிவிற்கு அப்பாற்பட்டது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** சரியாகச் சொன்னாய். இந்த அறிஞர்கள் அனைவரும் தங்களது கிணற்றிலேயே சுற்றித் திரியும் தவளைகளைப் போன்றவர்கள். வேத அறிவைப் பற்றி அவர்களால் என்ன புரிந்துகொள்ள முடியும்?

**மாணவன்:** உம், அப்படியா. வேறு விஷயத்திற்கு வருவோம். நகர அமைப்பில் இயற்கைக்கு முரணாக நாம் வாழ்வதைப் போல் வாழாமல், இயற்கையுடன் ஒத்து வாழும் வாழ்வே உண்மையான தூய்மையான வாழ்வு என்று வேதங்கள் உறுதிப்படுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். அவ்வாறே. உடற் தேவைகளைக் குறைத்து, நேரத்தை மீதமாக்கி, ஆன்மீக அறிவைப் பெறுவதில் உங்களை நீங்கள் அர்ப்பணிப்பதே உண்மையான வாழ்க்கையாகும். அதுவே உண்மையான வாழ்க்கை. உடல் சார்ந்த வாழ்வை அடிப்படையாகக் கொண்ட தற்போதைய நாகரிகம், மிருகங்களின் நாகரிகமாகும். இது நாகரிக வாழ்வே அல்ல. அதாதோ பிரஹ்ம-ஜிக்ஞாஸா, ஆன்மீக ஆத்மாவைப் பற்றி கேள்வி கேட்கும் நிலைக்கு ஒருவன் முன்னேறும்போதுதான் நாகரிக வாழ்க்கை தொடங்குகின்றது. ஆனால் அத்தகு கேள்விகள் இல்லாதபோது, அதாவது மக்கள் ஆன்மீக ஆத்மாவைப் பற்றி கேட்க இயலாதபோது, அவர்கள் நாய்களையும் பூனைகளையும் போன்றவர்கள். உடலின் இடர்பாடுகளிலிருந்து முடிந்த அளவு விடுபட்டிருக்க வேண்டும் என்று வேத வாழ்க்கை கற்றுத் தருகின்றது. எனவே, வேதக் கல்வி பிரம்மசரியத்துடன் தொடங்குகின்றது. ஆனால் இந்த அயோக்கியர்களால் காம வாழ்வைக் கட்டுப்படுத்த முடியாது. கட்டுப்பாடின்றி உடலுறவில் ஈடுபடலாம் என்பதும், கர்ப்பம் நேரிட்டால் குழந்தையைக் கொல்லலாம் என்பதும் தான் இவர்களது கொள்கை.

**மாணவன்:** ஆம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுவே இவர்களது அயோக்கிய கொள்கை. பயிற்சியின் மூலம் உடலுறவு வாழ்க்கையை மறக்க இயலும் என்பது குறித்து எந்த கருத்தும் இவர்களுக்கு இல்லை. உடலுறவை நீங்கள் மறந்துவிட்டால், கருக்கலைப்பு என்ற கேள்விக்கு இடமில்லை. ஆனால் அவர்களால் அப்படிச் செய்ய இயலாது. எனவேதான், அதாந்த-கோபிர் விஷதாம் தமிஸ்ரம், கட்டுப்பாடற்ற புலனின்பத்தின் மூலம் அவர்கள் படிப்படியாக மிருக வாழ்வை நோக்கிச் செல்கின்றனர் என்று கூறப்படுகிறது.

குழந்தையைக் கருவிலேயே கொல்பவன், அதாவது கருக்கலைப்பில் ஈடுபடுபவன், தனது அடுத்த பிறவியில் வேறொருவரால் கருவிலேயே கொல்லப் படுவான். எத்தனை குழந்தைகளை அவன் கொன்றானோ அத்தனை முறை அவன் கருவிலேயே கொல்லப்படுவான். எனவே, நூற்றுக்கணக்கான வருடங் களுக்கு அவனால் வெளிச்சத்தைப் பார்க்கவே இயலாது. அவன் வயிற்றிலேயே இருந்து அங்கேயே கொல்லப்படுவான். மக்களுக்கு இயற்கையின் சட்டங்கள் தெரிவதில்லை. அரசாங்கத்தின் சட்டங்களை மீறுவது போன்று இயற்கையின் சட்டங்களை மீற முடியாது. உதாரணமாக, நீங்கள் யாரையாவது கொன்றுவிட்டால், ஏதேனும் தந்திரம் செய்து அதிலிருந்து தப்பிவிடலாம். ஆனால் இயற்கையின் சட்டத்திலிருந்து நீங்கள் தப்பிக்க முடியாது.

எத்தனை முறை நீங்கள் கருவை கொலை செய்தீரோ அத்தனை முறை நீங்கள் கருவிற்குள் கொல்லப்படுவீர்கள். அதுவே இயற்கையின் சட்டம்.

**மாணவன்:** இலண்டனின் முக்கியமான தொரு மருத்துவமனையின் கருச்சிதைவு பிரிவில் பணிபுரியும் ஒரு நர்ஸிடம் நான் சென்ற வாரம்தான் பேசிக் கொண்டிருந்தேன். அது மிகவும் கொடூரமானது. மிகவும் வளர்ச்சி பெற்ற கருக்களைக்கூட சிதைக்கின்றனர், அவற்றில் உயிர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயம் உள்ளன.

**ஸ்ரீல பிரபுபாதர்:** சாத்தியக்கூறுகள் என்ற கேள்விக்கு இடமே இல்லை. உடலுறவின் ஆரம்பத்திலிருந்தே உயிர் அங்கு இருக்கின்றது. ஆத்மா மிகவும் சிறியது. ஒவ்வொருவரின் கர்மத்தின் அடிப்படையில், இயற்கையின் விதிப்படி, ஒருவன் தனது தந்தையின் விந்துக்குள் செலுத்தப்பட்டு, தாயின் கருவினினுள் புகுத்தப்படுகிறான். ஆணின் விந்துவும் பெண்ணின் முட்டை அணுக்களும் இணைந்து பட்டாணியைப் போன்ற ஓர் உடலை உருவாக்குகின்றன. பின்னர் அது படிப்படியாக வளர்ச்சி பெறுகின்றது. இவையனைத்தும் வேத சாஸ்திரங்களில் விளக்கப்பட்டுள்ளன. காதுகள், கண்கள், மூக்கின் இரு துவாரங்கள், வாய், ஜனன உறுப்பு, குதம் ஆகிய ஒன்பது துளைகளும் ஆரம்ப நிலையில் தோன்றுகின்றன.

பின்னர் புலன்கள் படிப்படியாக வளர்ந்து, ஆறரை மாதங்களில் அனைத்தும் முழுமை பெறுகின்றன. அப்போது அக்குழந்தைக்கு உணர்வு திரும்புகின்றது. உடல் முழு வடிவத்தைப் பெறுவதற்கு முன்பு, அவன் மயக்க மருந்தில் இருப்பதைப் போன்று உணர்வற்று இருக்கின்றான். பின்னர், கனவு காண ஆரம்பித்து படிப்படியாக சுய உணர்வைப் பெறுகின்றான். அச்சமயத்தில் வெளியே வருவதற்கு அவன் மிகவும் தயங்குகிறான்; இருப்பினும், இயற்கையின் உந்துதலால் வெளியேறுகிறான். இதுவே பிறப்பின் வழிமுறையாகும்.

இதுவே வேத அறிவு. வேத இலக்கியங்களில் இவையனைத்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளதை நீங்கள் காணலாம். எனவே, வேதங்கள் எவ்வாறு வரலாற்றிற்கு உட்பட்டதாகும்? ஆனால், நாம் ஆன்மீகத்தைப் பற்றி பேசுவதுதான் இதிலிருக்கும் சிரமமாகும். எனவே, ஜட வாழ்வில் மூழ்கியிருப்பவர்களுக்கு சில சமயங்களில் இதைப் புரிந்துகொள்வது கடினமாக உள்ளது. அதனை அறிய இயலாத அளவு அவர்கள் மந்த புத்தியைப் பெற்றுள்ளனர்.

# பற்றற்ற ஸ்ரீல பிரபுபாதர்



**பஹுலஸ்வ தாஸ்:** பிரபுபாதரைச் சந்திக்க பலர் வந்தனர். ஒவ்வொருவரும் அவருக்காக ஏதேனும் கொண்டு வந்தனர். முதலாவதாக வந்த நபர் ஓர் அருமையான ஒமேகா தங்க கைக்கடிகாரத்தினை பிரபுபாதருக்கு பரிசளித்தார். "மிக்க நன்றி," என்று கூறிய பிரபுபாதர், தனது கையில் அணிந்திருந்த பழைய கைக்கடிகாரத்தினை கழற்றி அருகிலிருந்தவருக்குக் கொடுத்துவிட்டு, புதியதை தனது கையில் அணிந்து கொண்டார். சிறிது நேரம் கழித்து வந்த மற்றொரு நபர், குறைந்தது 3,500 டாலர் மதிப்புள்ள ரோலக்ஸ் தங்க கைக்கடிகாரத்தினை பிரபுபாதருக்குப் பரிசளித்தார். தங்க ஒமேகாவை கையிலிருந்து கழற்றி, அருகிலிருந்தவருக்குக் கொடுத்து விட்டு, "மிக்க நன்றி" என்று கூறிய வண்ணம் தங்க ரோலக்ஸ்ஐ கையில் கட்டினார். மேலும் சற்று நேரம் கழித்து அங்கு வந்த மற்றொரு நபர், சுமார் 100 டாலரே மதிப்புள்ள சாதாரண செய்கோ கைக்கடிகாரத்தினை பிரபுபாதரிடம் வழங்கினார். தங்க ரோலக்ஸ்ஐ கையிலிருந்து கழற்றிய அவர், அடுத்தவருக்குக் கொடுத்த பின், "மிக்க நன்றி" என்று கூறிய வண்ணம் செய்கோவை கையில் கட்டினார். கிருஷ்ணரின் சார்பாக பிரபுபாதர் ஏற்றுக் கொள்கிறார் என்பதை உங்களால் எளிதாகக் காண முடியும். "ஓ, இதனை எனக்காக எடுத்து வை. எனது அலமாரியில் வை," போன்றவை எல்லாம் அவரிடம் கிடையாது. "நீங்கள் எதைக் கொடுத்தாலும், கிருஷ்ணரின் சார்பாக நான் ஏற்றுக் கொள்கிறேன்," என்பதே அவரின் மனப்பான்மை. நீங்கள் பிரபுபாதரிடம் அதனை எப்போதும் காணலாம். பௌதிகப் பற்றுதல் இல்லாத புனிதர் அவர்.

நவம்பர் 9, ஸ்ரீல பிரபுபாதர் திரோபாவ திதி (மறைவு நாள்)

—யதுபர தாஸ் உருவாக்கிய "ஸ்ரீல பிரபுபாதரைப் பின்தொடர்ந்து" என்னும் வீடியோவின் ஒன்பதாவது பகுதியிலிருந்து

ஸ்ரீ ராதா கிருஷ்ணா இலவச திருமண தகவல் மையம்
இந்து மதம் சார்ந்த அனைத்து சமூகத்தின் ஆண், பெண் இருபாலருக்கும் ஜாதக பரிவர்த்தனை செய்து தரப்படும்.
நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.
ஹரி ஆடியோ & வீடியோ
290, M.P.பில்டிங் உட்புறம், பஸ் நிலையம், வாழப்பாடி - 636115. செல்: 9344858006

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் அத்தியாயம், ஸ்லோகம் 12

ஸூத ஜானாஸி பத்ரம் தே  பகவான் ஸாத்வதாம் பதி:
தேவக்யாம் வஸுதேவஸ்ய  ஜாதோ யஸ்ய சிகீர்ஷயா

### மொழிபெயர்ப்பு

சூத கோஸ்வாமியே, உமக்கு எல்லா மங்களமும் உண்டாகட்டும். தேவகியின் கருவில் வசுதேவரின் மகனான முழுமுதற் கடவுள் எந்தக் காரணத்திற்காகத் தோன்றினார் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

### பொருளுரை

பகவான் என்னும் சொல், செல்வம், பலம், புகழ், அழகு, அறிவு, துறவு ஆகிய அனைத்திற்கும் ஆளுநராகிய சர்வ வல்லமை பொருந்திய இறைவனைக் குறிப்பதாகும். அவர் தமது தூய பக்தர்களைக் காப்பவராவார். பகவான் அனைவரிடமும் சமநோக்குடையவர்; இருப்பினும், தமது பக்தர்களிடம் அவர் தனிப்பட்ட விருப்பமுள்ளவராக இருக்கிறார். ஸத் என்பது பூரண உண்மையைக் குறிக்கின்றது. அந்தப் பரபிரம்மத்தின் தொண்டர்களாக இருப்பவர்கள் ஸாத்வதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அத்தகைய தூய பக்தர்களின் பாதுகாவலரான முழுமுதற் கடவுள், ஸாத்வதர்களின் காவலர் என்று அறியப்படுகிறார். பத்ரம் தே, "உமக்கு ஆசிர்வாதங்கள்" என்னும் சொற்கள் பேச்சாளரிடமிருந்து பரபிரம்மத்தை அறிவதில் சாதுக்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் காட்டுகிறது. புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர், வசுதேவரின் மனைவியான தேவகிக்குத் தோன்றினார். முழுமுதற் கடவுள் தோன்றுவதற்குரிய தெய்வீகத் தளத்தின் அடையாளமே வசுதேவர்.

### ஸ்லோகம் 13

தன் ந: ஷுஷ்ருஷமாணானாம்  அர்ஹஸ்-யங்கானுவர்ணிதும்
யஸ்யாவதாரோ பூதானாம்  க்ஷேமாய ச பவாய ச

### மொழிபெயர்ப்பு

ஓ சூத கோஸ்வாமி, பரம புருஷ பகவானையும் அவரது அவதாரங்களையும் பற்றி அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம். முந்தைய ஆச்சாரியர்களால் அளிக்கப்பட்ட அந்த உபதேசங்களை தயவுசெய்து எங்களுக்கு விளக்கிக் கூறுங்கள். ஏனெனில், அவற்றைப் பற்றி பேசுவதாலும் கேட்பதாலும் ஒருவர் உயர்வடைகிறார்.

### பொருளுரை

பரம உண்மையின் திவ்யமான செய்தியைக் கேட்பதற்குரிய நிபந்தனைகள் இங்கே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. முதல் நிபந்தனை, சபையோர் மிகவும் உண்மையானவர்களாகவும் கேட்பதில் ஆவலுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். மேலும், பேச்சாளர் அங்கீகரிக்கப்பட்ட ஆச்சாரியரிட மிருந்து கீழிறங்கி வரும் சீடப் பரம்பரையின் சங்கிலித் தொடரில் இடம் பெற்றவராக இருக்க வேண்டும். பரம்பொருளின் திவ்யமான கருத்துகள் பௌதிக விஷயங்களில் ஆழ்ந்துள்ளவர்களால் புரிந்துகொள்ளப்பட முடியாததாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவின் வழிகாட்டலின்கீழ் ஒருவர் படிப்படியாக தூய்மையடைகிறார். எனவே, ஒருவர் சீடப் பரம்பரையின் சங்கிலித் தொடரில் பங்குபெற்று, அடக்கத்துடன் கேட்கும் ஆன்மீகக் கலையை கற்றறிய வேண்டும். சூத கோஸ்வாமி மற்றும் நைமிஷாரண்ய முனிவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இவ்வெல்லாத் தகுதிகளும் இருந்தன. ஏனெனில், ஸ்ரீல சூத கோஸ்வாமி ஸ்ரீல வியாஸதேவரின் பரம்பரையில் வந்தவர்; மேலும், நைமிஷாரண்ய முனிவர்கள் அனைவரும் உண்மையை அறிவதில் ஆர்வத்துடன் உள்ள நேர்மையுள்ள ஆத்மாக்களாவர். இவ்வாறாக எல்லா தகுதிகளும் இருந்ததால், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அசாதாரணமான செயல்கள், அவரது அவதாரம், அவரது பிறப்பு, தோற்றம் அல்லது மறைவு, அவரது உருவங்கள், அவரது திருநாமங்கள் போன்ற தெய்வீக விஷயங்கள் அனைத்தையும் சுலபமாக புரிந்துகொள்ளப்படக் கூடியவையாகின்றன. இத்தகைய உபன்யாஸங்கள் ஆன்மீகத் தன்னுணர்வுப் பாதையிலுள்ள அனைத்து மனிதர்களுக்கும் உதவுகின்றன.

### ஸ்லோகம் 14


ஆபன்ன: ஸம்ஸ்ருதிம் கோராம்  யன்-நாம விவஷோ க்ருணன்
தத: ஸத்யோ விமுச்யேத  யத் பிபேதி ஸ்வயம் பயம்

## மொழிபெயர்ப்பு

பிறப்பு இறப்பு என்னும் சிக்கலான வலையில் பந்தப்பட்டுள்ள உயிர்வாழிகள், கிருஷ்ணரின் திருநாமத்தை அறியாமல் உச்சரித்தால்கூட, அப்பந்தத்திலிருந்து உடனடியாக விடுவிக்கப்படுகின்றனர். அத்திருநாமத்தைக் கண்டு பய ஸ்வரூபமே பயப்படுகிறது.

## பொருளுரை

வாசுதேவர் அல்லது பகவான் கிருஷ்ணர் எனப்படும் பரம புருஷ பகவானே அனைத்திற்கும் பரம ஆளுனராவார். பகவானின் கடுங்கோபத்திற்கு அஞ்சாதவர் எவரும் படைப்பில் இல்லை. மாபெரும் அசுரர்களான இராவணன், ஹிரண்யகசிபு, கம்ஸன் போன்ற மிகவும் சக்தி வாய்ந்த ஜீவன்களும் பரம புருஷரால் கொல்லப்பட்டனர். மேலும், சர்வ வல்லமை பொருந்திய வாசுதேவர், தமது சுய சக்திகளையெல்லாம் அவரது நாமத்தில் பொருத்தியுள்ளார். அனைத்தும் அவருடன் சம்பந்தப்பட்டுள்ளன, மேலும் அனைத்தின் அடையாளம் அவரிடமே உள்ளது. கிருஷ்ணரின் நாமத்தைக் கண்டு பய ஸ்வரூபமே பயப்படுகிறது என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. கிருஷ்ணரின் திருநாமத்திற்கும் கிருஷ்ணருக்கும் வேறுபாடில்லை என்பதையே இது குறிக்கின்றது. எனவே, கிருஷ்ணரின் நாமம் சாக்ஷாத் பகவான் கிருஷ்ணருக்கு சமமான சக்தியைக் கொண்டதாகும். இரண்டிற்கும் இடையில் சற்றும் வேறுபாடு கிடையாது. எனவே, மிகப்பெரிய ஆபத்துகளுக்கு இடையிலும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமங்களை உதவிக்கு அழைக்கலாம். கிருஷ்ணரின் திவ்யமான நாமத்தை, உணர்வின்றி அல்லது சூழ்நிலைகளின் கட்டாயத்தால் உச்சரித்தால்கூட பிறப்பு இறப்பெனும் தடைகளிலிருந்து விடுபட அஃது ஒருவருக்கு உதவ முடியும். (தொடரும்)


# பகவத் கீதை
## உண்மையுருவில்

ஒரு
கண்ணோட்டம்—
19 மாத தொடர்
விளக்கங்கள்

- ★ கீதையின் அறிமுகம், மற்றும் பதினெட்டு அத்தியாயங்களை எளிதில் புரிந்துகொள்ள உதவும் தொடர் கட்டுரைகள்
- ★ டிசம்பர் இதழிலிருந்து ஆரம்பம்


---

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(நவம்பர் 1 முதல் டிசம்பர் 10 வரை)**

### நவம்பர்

2, செவ்வாய், இராம ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:07–10:01

6, சனி, தீபாவளி (தமிழக வழக்கத்தில் 5ஆம் தேதியே கொண்டாடப்படுகிறது)

7, ஞாயிறு, கோ பூஜை, கோவர்தன பூஜை
ஸ்ரீ ரஸிகானந்தர் தோன்றிய நாள்

9, செவ்வாய், ஸ்ரீல பிரபுபாதர் மறைவு நாள் (மதியம் வரை விரதம்)

14, ஞாயிறு, கோபாஷ்டமி
ஸ்ரீ ஸ்ரீனிவாஸ ஆச்சாரியர் மறைவு நாள்

17, புதன், உத்தன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:11–10:04
ஸ்ரீல கௌர கிஷோர் தாஸ் பாபாஜி மறைவு நாள்
பீஷ்ம பஞ்சகத்தின் முதல் நாள்

20, சனி, ஸ்ரீ பூகர்ப கோஸ்வாமி மறைவு நாள்
நான்காவது சாதுர்மாதத்தின் இறுதி நாள்

21, ஞாயிறு, ஸ்ரீ கிருஷ்ண ரஸயாத்திரை
துளசி-சாலிக்கிராம விவாஹம்
ஸ்ரீ நிம்பார்காசாரியர் தோன்றிய நாள்
பீஷ்ம பஞ்சகத்தின் இறுதி நாள்

### டிசம்பர்

2, வியாழன், உத்பன்ன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:18–10:09
ஸ்ரீ நரஹரி சர்கார் மறைவு நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஶ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda. swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஶ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஶ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: 99442 05875. மின்னஞ்சல்: rukmiha.jps@pamho.net

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஶ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.



தமிழில் உள்ள
ஒரே முழுப் பதிப்பு
அனைத்து இஸ்கான்
கோவில்களிலும் கிடைக்கும்.
மேலும் விபரங்களுக்கு, 98948 14553
சர்வ வேதாந்த சாரம் எனப்படும்
ஸ்ரீமத் பாகவதம்
பக்தி, யோகம், தியானம் போன்றவற்றின் முழுமையான கலைக்களஞ்சியம்
288 வண்ணப்படங்கள்
12 காண்டங்கள், 18 புத்தகங்கள்
16,000 பக்கங்களுக்கு மேல்
18,000 ஸ்லோகங்களும் அடங்கியது
அனைத்து வேத இலக்கியங்களின் தலைசிறந்த மணிமகுடமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவத மஹா புராணம், வேதங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். இது சாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இலக்கிய அவதாரம். வேதாந்த சூத்திரத்திற்கு வேத வியாசரே அளித்த இயற்கையான விளக்கவுரை.
பிரபஞ்சத்தின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை படைப்பு, கோள்களின் நிலை, படைப்பின் மூல தத்துவம், இறை விஞ்ஞானம், முக்தி, இறுதி இலக்கு மற்றும் பல விஷயங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கக்கூடிய களங்கமற்ற புராணம்.
புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த அனுபவமான ஸ்ரீமத் பாகவதம், பரமஹம்ஸ நிலையில் உள்ளவர்கள் சுவைக்கும் அமிர்தமாகும்.
ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் அதன் மூல சமஸ்கிருத வடிவம், தமிழ் வடிவம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம், மொழிபெயர்ப்பு, மற்றும் தெளிவான பொருளுரைகளை வழங்கும் செம்மையான நூல்கள்.




தங்கமயில்
தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553